DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1450 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 19, 2024

# Toronto's RE/MAX ACE Realty Inc. hosted their Annual Awards Gala

## நன்கு அறியப்பெற்ற முகவர் நிறுவனமான RE/MAX ACE Realty Inc. நடத்திய விற்பனை விருதுகள் வழங்கும் விழா



ரொறன்ரோ பெரும்பாகத்தில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவனமான **RE/MAX ACE Realty Inc** கடந்த வெள்ளிக்கிழமையான 12-01-2024 அன்று நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் விருதுகள் வழங்கும் விழா **Scarborough Convention Centre** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிறுவனத்தின் பங்காளர்களான திருவாளர்கள் **Sri Nadarajasundram, Vaheesan Jeyaveerasingam, Selvan Kasipillai, Suresh Paramalingam, Rathees Paramalingam and Vijay Selvanayagam** ஆகியோர் தமது அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் சகிதம் சிறப்பான முறையில் விருதுகள் வழங்கும் விழாவை நடத்தினர்.

(உள்ளே விபரமான செய்தி 15ம் பக்கத்தில்)

# இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கு: ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை

*— யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்*

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றது. பலஸ்தீனத்தில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்கின்றது என்பது தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டு.

இதுபோன்று ஏற்கனவே ஒரு வழக்கு பர்மிய அரசாங்கத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த கம்பியா அந்த வழக்கை 2019ல் தொடுத்தது. இந்த இரண்டு வழக்குகளும் அனைத்துலக நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள். இந்த இரண்டு வழக்குகளையும் தொடுத்தது ஆப்பிரிக்க கண்டத்தில் இருக்கும் நாடுகள்.

தென்னாபிரிக்காவின் இந்த நகர்வானது இனப்படுகொலைக்கு உள்ளாகும் அல்லது உள்ளாகிய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒன்று. நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படியும் அமையலாம். அது ரோகியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான வழக்கில் நடந்தது போல பொருத்தமான நீதியை பெற்றுக் கொடுக்கத் தவறலாம்.



உலக அரசியலில் தூய நீதி எதுவும் கிடையாது. போருக்கு பின்னரான சமூகங்களில் பொறுப்புக் கூறும் நோக்கத்தோடு ஐநா முன்வைக்கும் நிலைமாறு கால நீதியும் கூட தூய நீதி அல்ல. அது ஒரு அரசியல் நீதி, அது ஓர் அரசியல் தீர்மானம். (தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


மேயர் பிரவுன்
அவர்களும் நகர கவுன்சிலர்களும்
தங்களை அழைக்கிறார்கள்
தமிழ்
பாரம்பரிய மாதத்தைக்
கொண்டாடுங்கள்
ஜனவரி 28 | நண்பகல்12 – பிற்பகல் 3
வரை நகர்மன்ற அரங்கம்
நிகழ்நேர நிகழ்ச்சிகள், பாரம்பரியமான மாதிரி உணவு வகைகளை மகிழ்ந்து அனுபவியுங்கள் மற்றும் தமிழ் சமூகத்தினரின் செழுமையான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.
பிராம்ப்டன் தமிழ்ச் சங்கம் மற்றும் பிராம்ப்டன் மூத்தகுடிமக்கள்
சங்கம் ஆகியவற்றுடன் கைகோர்த்தபடி
brampton.ca/events
BRAMPTON


உங்கள் வீட்டை
புதுப்பிக்க
வேண்டுமா?
Coverall
Group Inc
Painting
Bathrooms
Kitchens
Decks
Flooring
Basements
Pot lights
Accent Walls
Contact us
416.706.8160


Tamil Heritage Month
இனிய தமிழ் மரபுத்திங்கள்
MPP Logan Kanapathi
Markham - Thornhill
மாகாணம் சார்ந்த விடையங்களுக்கு
நீங்கள் என்னை தொடர்பு கொள்ளலாம்.
Tel: 905 - 305 - 1935 | E-mail: logan,kanapathico@pc.ola.org
Visit Us: 7380 McCowan Rd, Unit 3, Markham
https://logankanapathi.ca/

உதயன் கதிரோட்டம்

# பலஸ்தீனத்தில் இஸ்ரேலிய கொடியவர்கள் நடத்தும் இனப்படுகொலைகளைக் கண்டித்து சர்வதேச நீதி மன்றத்தை நாடியுள்ள தென்னாபிரிக்காவை வணங்குவோம்!

தென்னாபிரிக்கா என்றவுடன் எமக்கு கறுப்பு நிறம் தான் ஞாபகத்திற்கு வரும். அதற்கு காரணம் அங்கு கறுப்பினத்தவர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் தலைவன் நெல்சன் ம ண்டேலா அந்த இனிய தேசத்தின் அதிபராக பதவி வகித்துள்ளார். கறுப்பு இனத்தவர்களை விட தென்னிந்தியாவிலிருந்து அங்கு வெள்ளைக்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்ட தென்னிந்தியர்கள் உள்ளார்கள். அவர்களின் நிறமும் பெரும்பாலும் கறுப்பாகவே காணப்படுகின்றது. ஆனாலும். அங்கு வெள்ளை நிறத்தவர்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் ஆங்கிலேயர்களின் வழி வந்தவர்கள் அல்ல என்று வரலாறு கூறுகின்றது

இனி வரும் பந்திகளில் இந்த நிறம் பற்றிய விடயங்கள் எதுவுமே இடம்பெறா என்பதை குறிப்பிட்டு தொடர்கின்றோம்.

. இந்த வாரம் நாம் நம் முக்கிய பக்கமாக விளங்கும் கதிரோட்டம் பகுதியில் தென்னாபிரிக்கா பற்றிய முக்கியவத்தை வழங்கியதற்கு பலஸ்தீனமும் நமது தாயக மண்ணும் காரணமாக அமைந்து விட்டது. தனது இவ்வார "உதயன்" தொடரில் யாழ்பபாணத்திலிருந்து எழுதும் நிலாந்தன். அந்த யாழ் மண்ணிலிருந்து முதலில் பலஸ்தீனத்தையும் பின்னர் தென்னாபிரிக்காவையும் தொட்டுப் பார்த்துள்ளார். பலஸ்தீனத்தில் இஸ்ரேல் என்னும் கொடிதான தேசம் நடத்தும் இனப்படுகொலைகளைக் கண்டித்து சர்வதேச நீதி மன்றத்தை நாடியுள்ள செய்தி நிலாந்தனின் மனதை தொட்டு உறுத்தியுள்ளது.

ஆமாம், தென்னாபிரிக்காஇஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றது. பலஸ்தீனத்தில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்கின்றது என்பதுதான் தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டு.

நிலாந்தனின் கூற்றுப்படி. இதுபோன்று ஏற்கனவே ஒரு வழக்கு பர்மா தேசத்தின் அரசாங்கத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த கம்பியா அந்த வழக்கை 2019இல் தொடுத்தது. இந்த இரண்டு வழக்குகளும் அனைத்துலக நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள். இந்த இரண்டு வழக்குகளையும் தொடுத்தது ஆப்பிரிக்க கண்டத்தில் இருக்கும் நாடுகள் என்கிறார் நிலாந்தன்.

அத்துடன் அவர் நமது ஈழத்தமிழர்கள் இந்த தென்னாபிரிக்கா சர்வதேச நீதி மன்றத்தை நாடிய விடயத்தை தங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார் அவர்.

எங்கள் தாய் மண்ணில் 2009 வரையிலும் மாத்திரமல்ல. இன்னும் அங்கு இடம்பெறும் இனப்படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகள் காணிகளை அபகரித்து அதன் உரிமையாளர்களாக விளங்கும் தமிழர்களை விரட்டி அடித்தல் கொலை செய்தல் போன்ற

கொடிதான அடக்குமுறைகளை மேற்கொள்ளும் இலங்கை அரசையும் அதன் ஆட்சியாளர்களையும் அவர்களுக்கு பக்கத் துணையாக விளங்கும் இராணுவக் கொடியவர்களையும் சர்வதேச நீதி மன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையை நோக்கிய வேண்டுகோள்களையும் கோரிக்கைகளையும் எழுத்து மூலமான விண்ணப்பங்களையும் நம்மவர்களில் பல தரப்பினர் 2009ம் ஆண்டு தொடக்கம் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான முயற்சிகள் ஏன் வெற்றியளிக்கவில்லை என்று ஏமாற்றமும் சலிப்புத் தன்மையும் எமது தரப்பில் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் ஆயிரக்கணக்கானவர்களில் படிந்துள்ளமை நன்கு புலப்படுகின்றது.

ஆனால் இந்த கால தாமதத்திற்கும் தொடர்ச்சியாக முயன்றும் கொலையாளிகள் தண்டிக்கப்படுவதற்கான எமக்கு சாதகமான பதில்களோ அன்றி விளைவுகளோ ஏற்பட்டுள்ளனவா என்ற கேள்விகளை எமக்கு முன்பாக வைத்தால். அவற்றிக்கு பதிலாக "பூஜ்ஜியம்" தான் பதிலாகக் கிடைக்கின்றது.

ஆனால் எம் மக்களை கொன்றழித்தவர்கள் எவ்வாறு "காப்பாற்றப்படுகின்றார்கள்" என்று சற்றும் கணித்துப் பார்த்தால் அந்த விடயத்தில் இலங்கை அரசோ அன்றி அந்த கொடிய அரசிற்கு சாதகமான நாடுகளோ உள்ளன என்பதிலும் நமது மொழி பேசுகின்றவர்களும் நமது மக்கள் அவர்கள் பிரதேசங்களில் இடம்பெற்ற தேர்தலில் வாக்குகளை வழங்கி பாராளுமன்றத்திற்கு அனுப்பியவர்களில் சிலரும் உள்ளார்கள் என்பதை அறிகின்றபொழுது எமது மனது எரிவது தான் "எஞ்சி" நிற்கின்றது.

தென்னாபிரிக்கா என்னும் மனித நேயமிக்க நாடு எங்கோ ஒரு பகுதியில்

கொடிய கந்தகக் குண்டுகளுக்கு இரையாகி மடியும் பலஸ்தீனத்தின் அப்பாவித் தாய்மார் பிள்ளைகள் வயதானோர் என அந்த நாட்டு பிரஜைகள் மீது காட்டும் நேசம் பாராட்டுக்குரியது. இதன் காரணமாகவே நாம் இவ்வாரக் கதிரோட்டத்தின் தலைப்பில்"தென்னாபிரிக்காவை வணங்குவோம்" என்று குறிப்பிட்டுள்ளோம் என்பதையும் வாசகர்கள் கவனிக்கவும்.

"தென்னாபிரிக்கத் தேசத்தின் இந்த நகர்வானது இனப்படுகொலைக்கு உள்ளாகும் அல்லது உள்ளாகிய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒன்று. நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படியும் அமையலாம்.அது ரோகியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான வழக்கில் நடந்தது போல பொருத்தமான நீதியை பெற்றுக் கொடுக்கத் தவறலாம். உலக அரசியலில் தூய நீதி எதுவும் கிடையாது. போருக்கு பின்னரான சமூகங்களில் பொறுப்புக் கூறும் நோக்கத்தோடு ஐநா முன்வைக்கும் நிலை மாறு கால நீதியும் கூட தூய நீதி அல்ல. அது ஒரு அரசியல் நீதி, அது ஓர் அரசியல் தீர்மானம்.யார் யாருக்கு எதிராக வழக்கு தொடுப்பது? யார் யாரைக் கூப்பிட்டு விசாரிப்பது? போன்ற எல்லாவற்றிலுமே அரசியல் தீர்மானங்கள் உண்டு."

இவ்வாறு இந்த வாரத்தின் தனது கட்டுரையில் நிலாந்தன் எமக்கு உலக அரசியலின் "யதார்த்தத்தை"க் காட்டும் கருத்துக்களை தொடராக முன்வைக்கின்றார்.

கடந்த காலங்களில் எமது மக்களுக்கும் நியாமான கோரிக்கைகளை முன்வைத்து போராடி போராளிகளுக்கும் அவர்கள் தலைகளில் விழும்படியாக கந்தகக் குண்டுகளை அள்ளி அள்ளி வீசிய நாடுகளில் கியூபா என்கின்ற ஆயுதப் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்ற ஒரு நாடு இருந்தது என்பதை நம்ப முடியாமல் உள்ளது என்றும் எழுதுகின்றார் நிலாந்தன் அவர்கள்.

தென்னாபிரிக்காவின் வழக்கு தொடர்ந்த விடயம் தொடர்பாக நமது மக்கள் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து எவ்வாறு முனைப்பு பெறப்போகின்றதோ என்பதற்கு முன்பாக இனப்படுகொலை செய்யப்பட்ட எமது மக்கள். தொடர்ச்சியாக அச்சுறுத்துப்பட்டுக் கொண்டிருக்கும் அவர்களது வாரிசுகள் ஆகியோருக்கு நீதியைப் பெற்றுத்தர யாரும் இல்லை என்ற நிலைதான் தற்பொழுது எமது கண்களுக்கும் மனதிற்கும் தெரிந்த ஒன்றாக உள்ளது.

தென்னாபிரிக்கா நாடு பலஸ்தீன மக்களை காப்பாற்றுவதற்காக சர்வதேச நீதி மன்றத்தை நாடியுள்ளது. ஆனால் நமது மண்ணில் இனப்படுகொலைகளுக்கு எதிரான குரல் எழுப்பிய வண்ணம் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்திய வண்ணம் உள்ள அமைப்புக்களுக்கு எதிராக மறைமுகமான தாக்குதல்களை நடத்துகின்றவர்கள் யார் என்று பார்த்தால் "நமது தமிழர்களே" என்ற பதில் வருகின்றது.

நமது ம்ணணில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக வருடக்கணக்காக போராட்டங்களை நடத்திவரும் அன்னையர்களையும் அவர்களோடு இணைந்திருக்கும் தோழர்களையும் எம்மால் தெரிவு செய்யப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் "எதிரிகளாகவே" பார்க்கின்றார்கள். அவர்கள் போராட்டங்கள் நடத்தும் கொட்டகைகள் மீது தங்கள் பார்வை பட்டுவிடக்கூடாது என்பதற்கான வேறு வழிகளால் பயணிக்கின்றார்கள். அந்த அமைப்பின் முக்கியஸ்த்தரான ஒரு செயற்பாட்டாளர் மீது அரசாங்கத்தில் அமைச்சராக விளங்கும் ஒருவரது கையாட்களான "காடையர்கள்" சில வருடங்களுக்கு முன்னர் "நடத்திய வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பான வழக்கு இன்னும் வவுனியா நீதி மன்றத்தில் தொடர்கின்றது. இவ்வாறு "குலத்தைக் கெடுக்க வந்த இந்த கோடரிக்காம்புகள்" எதற்காக இவ்வாறு நடந்து கொள்கின்றன என்று பார்த்தால். அவை அற்ப சலுகைகளுக்காகவும். பதவிகளை தக்க வைப்பதற்காகவும் தான் என்பது புலனாகின்றது. தமிழர்கள் அல்லாதவர்கள் எவ்வாறு எமக்கெதிராக ஒன்று பட்டு நிற்கின்றார்களோ. அவர்களை பின்பற்றுபவர்களும் "தமிழர்களும்" உள்ளார்கள் என்ற நிலை காணப்படும் போது தென்னாபிரிக்காவின் முயற்சி போன்று எமது மண்ணில் நிகழுமா என்பது கேள்வியாகவே இருக்கப்போகின்றது என்பதும் ஒரு "சாபம்" தான்.

இவ்வாறிருக்கும் போது எம்மை கொன்றழித்தவர்கள் எப்போது தண்டிக்கப்படுவார்கள் என்ற கேள்விகளை போராடிக் கொண்டிருக்கும் எமது மக்களும் அமைப்புக்களும் தென்னாபிரிக்காவின் முயற்சிகளின் தன்மையை நோக்க வேண்டும். மேலும். நிலாந்தன் குறிப்பிட்டுள்ள எமது ஈழத்தமிழர்கள் சிந்திக்க வேண்டும் என்ற வேண்டுகோள் நிஜமாகும் வகையில் எமக்கு எதிராகச் செயற்படும் "கோடரிக்காம்புகளை" தவிர்த்து நம் நாளைய அரசியலை நகர்த்திச் செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்பதையே எமது கருத்தாக சமர்ப்பிக்கின்றோம்.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறவுள்ள முக்கிய மாநாடு – பு.கஜிந்தன்

வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் **yarl it hub** மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இணைந்து நடாத்தும் **FiTEN Yarl** 2024 மாநாடு இன்று வெள்ளிக்கிழமை (19.01.2024) காலை-09.30 மணி முதல் மாலை-04 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது. எமதுயாழ்ப்பாணப் பிரதேசத்தில் வளர்ந்து வரும் தொழில் முனைவோரை வலுப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை வளர்த்தல் எனும் தொனிப்பொருளில் இம் மாநாடு நடாத்தப்படவுள்ளது.

உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் மற்றும் தமிழ்நாட்டில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தல், பல வெற்றிபெற்ற தொழில் வல்லுனர்களின் தொழில் அனுபவ மற்றும் அறிவுப் பகிர்வுகள் என்பவற்றுடன் உள்ளூர் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தல் ஆகியன இம் மாநாட்டின் நோக்கங்களாகும்.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் துறைத் தலைவர்களுடன், அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடனான நட்புறவுச் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை (18.01.2024) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Help Wanted
Workers needed for renovation company. Must have experience in one of the following:
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

சென்னை நகரத்திற்கு அருகில் காணி விற்பனைக்கு
சென்னை நகரத்திற்கு அருகில் சிறிய துண்டுக் காணி விற்பனைக்கு உண்டு.
காணி அமைந்திருக்கும் இடம்:
Santhi Nagar .149 Pallikarani village.Said pet Taluk.
Chengai MGR District. St Thomas Mount Panchayat Union.
மேலதிக விபரங்களுக்கு ஸ்காபுறோவில் வசிக்கும் அதன் உரிமையாளரை அழைக்கவும்:
416 858 4814

# பிரதமர் மோடி வருகையால் சென்னையில் 5 அடுக்கு பாதுகாப்பு கேலோ இந்தியா போட்டிகளை இன்று தொடங்கி வைக்கிறார்

இந்திய செய்திகள்

தமிழகத்துக்கு 3 நாள் பயணமாக வரும் பிரதமர் நரேந்திர மோடி, சென்னையில் இன்று மாலை கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகளை தொடங்கி வைக்கிறார். இதையொட்டி, 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.தேசிய அளவிலான கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகளை நடத்தும் வாய்ப்பு இந்த ஆண்டு தமிழகத்துக்கு கிடைத்துள்ளது. சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய 4 மாவட்டங்களில் இப்போட்டிகள் இன்று முதல் ஜன.31ம் தேதி வரை நடைபெறுகின்றன. சென்னை பெரியமேட்டில் உள்ள நேரு உள்விளையாட்டு அரங்கில் இதன் தொடக்க விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது.

இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு, போட்டிகளை தொடங்கி வைக்கிறார்.முன்னதாக, பிரதமர் மோடி கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து மாலை 4 மணிக்கு விமானத்தில் புறப்பட்டு, சென்னை விமான நிலையத்துக்கு 4.50 மணிக்கு வருகிறார். அங்கிருந்து நேப்பியர் பாலம் அருகே உள்ள ஐஎன்எஸ் அடையாறு கடற்படை தளத்துக்கு ஹெலிகாப்டரில் வருகிறார். பின்னர், காரில் நேரு உள்விளையாட்டு அரங்குக்கு வருகிறார். அவருக்கு தமிழக பாஜக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.கேலோ இந்தியா விளையாட்டு போட்டி தொடக்க விழாவில், ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் ஸ்டாலின், மத்திய அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

தொடக்க விழாவில் தமிழக பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கர்னாடக இசைக் கலைஞர்கள் டி.வி.கோபாலகிருஷ்ணன், சுதா ரகுநாதன், சந்தானகோபாலன், நித்யஸ்ரீ மகாதேவன் ஆகியோரும், மீனாட்சி இளையராஜா, வி.எம். மகாலிங்கம், முத்துசிற்பி ஆகியோரும், 100 பரதநாட்டியக் கலைஞர்களும் இணைந்து, தமிழ்நாட்டின் செம்மொழி மற்றும் நாட்டுப்புற இசையின் கலவையை வழங்குகின்றனர்.உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழின் பயணம் மற்றும் பரிணாம வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் உடற்தகுதி மற்றும் விளையாட்டுகளின் தோற்றம் குறித்தும் விளக்கப்படுகிறது.



நம்மை பழங்காலத்துக்கு அழைத்துச் செல்வது போல இது சித்தரிக்கப்படுகிறது.பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் யோகாசன உலக சாதனை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.கடந்த 10 நாட்களாக 5 வாகனங்களில் தமிழகம் முழுவதும் பயணித்த கேலோ இந்தியா விளையாட்டு ஜோதியை, பலமுறை காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற டேபிள் டென்னிஸ் வீரர் ஏ.சரத் கமல் மற்றும் தடகள வீராங்கனை வி.சுபா ஆகியோர் பிரதமரிடம் ஒப்படைக்கின்றனர்.கேலோ இந்தியா தொடக்க விழாவை முடித்துக் கொண்டு இரவு 7.45 மணிக்கு ஆளுநர் மாளிகைக்கு காரில் செல்லும் பிரதமர், இரவு அங்கு தங்குகிறார்.நாளை (ஜன.20) காலை திருச்சி சென்று, ரங்கம் ரங்கநாதர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்து, அங்கு நடைபெறும் பூஜைகளில் பங்கேற்கிறார். பின்னர், ராமேசுவரம் சென்று ராமநாத சுவாமி கோயிலில் வழிபாடு செய்கிறார்.

நாளை இரவு ராமகிருஷ்ண மடத்தில் தங்குகிறார்.மறுநாள் (ஜன.21) காலை ராமேசுவரம் அக்னி தீர்த்த கடலில்புனிதநீராடும் பிரதமர் மோடி,பின்னர் தனுஷ்கோடி அரிச்சல்முனையில் உள்ள கோதண்டராமர் கோயிலில் நடைபெறும் பூஜையில் பங்கேற்ற பிறகு, டெல்லி திரும்புகிறார். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்: பிரதமர் வருகையை முன்னிட்டுசென்னையில் சிறப்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதல் காவல் ஆணையர்கள் பிரேம் ஆனந்த் சின்ஹா (தெற்கு), ஆர்.சுதாகர் (போக்குவரத்து), அஸ்ரா கார்க் (வடக்கு)மேற்பார்வையில் சட்டம் ஒழுங்கு,குற்றப்பிரிவு, போக்குவரத்து, ஆயுதப்படை, கமாண்டோ, தமிழ்நாடு சிறப்பு காவல் படை உட்பட பல்வேறு பிரிவுகளை சேர்ந்த 22 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

விழா நடைபெறும் நேரு உள்விளையாட்டு அரங்கம், விமான நிலையம், ஆளுநர் மாளிகை உட்பட பிரதமர் செல்லும் இடங்களில் 5 அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளது. தீவிர சோதனைகள் மற்றும் கண்காணிப்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.தங்கும் விடுதிகள், நட்சத்திர ஓட்டல்களில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. முக்கிய சாலைகள், சந்திப்புகளில் தீவிர வாகன சோதனை நடத்தப்படுகிறது. பேருந்து, ரயில், மெட்ரோ ரயில் நிலையங்களில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.ட்ரோன்கள் பறக்க தடை: முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை பெருநகர காவல்எல்லையில் ட்ரோன்கள், ரிமோட் மூலம் இயக்கப்படும் மைக்ரோ லைட் ஏர்கிராஃப்ட், பாராகிளைடர்ஸ், பாரா மோட்டார்ஸ், ஹேண்ட் கிளைடர்ஸ், ஹாட் ஏர் பலூன்கள் போன்றவற்றை பறக்கவிட தடை விதிக்கப்பட்டுள்ளது.பிரதமர் செல்லும் பாதைகள், நிகழ்ச்சி நடைபெறும் இடம், ஆளுநர் மாளிகையை சுற்றியுள்ள இடங்கள் சிவப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டு, ட்ரோன் கேமரா உள்ளிட்ட பறக்கும் பொருட்கள் பறப்பதற்கு இன்றும், நாளையும் (ஜன.19, 20) தடை விதித்து காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடற்கரை முதல் செங்கல்பட்டு வரை உள்ள அனைத்து ரயில் நிலையங்கள், பறக்கும் ரயில் நிலையங்கள் மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஆர்பிஎஃப், ரயில்வே போலீஸார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.கேலோ இந்தியா தொடக்க விழா நடைபெறும் பெரியமேடு நேரு உள்விளையாட்டு அரங்கை சுற்றியுள்ள சாலைகள் மற்றும் பிரதமர் காரில் செல்ல உள்ள ஐஎன்எஸ் அடையாறு நேரு உள்விளையாட்டு அரங்கம் ஆளுநர்மாளிகை இடையிலான சாலைகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருச்சியில் மாநகர காவல்ஆணையர் என்.காமினி தலைமையில் 3 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு குழுவினரும் (எஸ்பிஜி) பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். ராமேசுவரம், தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# உயிரிழப்பின்றி நடந்து முடிந்த மதுரை ஜல்லிக்கட்டு போட்டிகள் காயங்களையும் குறைப்பது சாத்தியமா? உயிரிழப்பு இல்லாமல் நடந்து முடிந்த மதுரை ஜல்லிக்கட்டு போட்டிகள்

நடந்து முடிந்துள்ள நிலையில், இனிவரும் காலங்களில் வீரர்களுக்கு காயங்கள் ஏற்படாமல் தவிர்க்க விழிப்புணர்வும், ஏற்பாடுகளும் அதிகரிக்கப்படுமா என்ற எதிர்பார்ப்பு ஜல்லிக்கட்டு ஆர்வலர்களிடையே எழுந்துள்ளது.உடனுக்குடன் முதலுதவி: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் 15ம் தேதி அவனியாபுரத்திலும், 16ம் தேதி பாலமேட்டிலும், 17ம் தேதி அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடந்து முடிந்துள்ளன. இந்தப் போட்டிகளில் கடந்த காலங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டு வந்தன. ஆனால், இந்த ஆண்டு, நடந்து முடிந்த மூன்று ஜல்லிக்கட்டு போட்டிகளிலும் ஒரு உயிரிழப்பு கூட நடக்கவில்லை.



படுகாயம் அடைந்தவர்கள் கூட உடனுக்குடன் வாடிவாசல் களத்தில் இருந்து மீட்கப்பட்டு, முதலுதவி சிகிச்சை வழங்கி மதுரை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை வழங்கி அவர்கள் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளன. மருத்துவக் குழுவுடன் கூடிய ஆம்புலன்ஸ்களும், ஜல்லிக்கட்டு நடந்த இடத்திலே தற்காலிக மருத்துவமனைகள் அமைத்து, படுகாயமடைந்தவர்களுக்கு துரித சிகிச்சை வழங்கப்பட்டது.மருத்துவமனை சிகிச்சைகள்: அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் 22 மாடுபிடி வீரர்கள், 25 காளை உரிமையாளர்கள், 2 பார்வையாளர்கள், 5 காவலர்கள் உள்பட 51 பேர் காயமடைந்தனர். இவர்களில் ஒன்பது பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டியில், மதுரை குற்றப்பிரிவு டிஎஸ்பி விஜயராஜன், தூத்துக்குடி காவல் நிலை ஆய்வாளர் அன்னராஜ், இரு சார்பு ஆய்வாளர்கள், 14 மாடுபிடி வீரர்கள், 15 காளை உரிமையாளர்கள், 10 பார்வையாளர்கள் உள்பட 43 பேர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேர் படுகாயமடைந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுபோட்டியில், 2 பெண் காவலர்கள் உள்பட 6 காவலர்கள், ஒரு 108 ஆம்புலன்ஸ் ஊழியர், 31 மாடுபிடி வீரர்கள், 18 காளை உரிமையாளர்கள், 27 பார்வையாளர்கள் உள்பட 83 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 11 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**பார்வையாளர்களிடம் விழிப்புணர்வு:**

உயிரிழப்பு ஏற்படாவிட்டாலும் பல்வேறு மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், பார்வையாளர்கள் உடல்களில் காயம் ஏற்பட்டு உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களால் முன்போல் தற்போது இயல்பு வாழ்க்கை வாழ முடியாது. அதனால், அவர்கள் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற பெரிய காயங்கள் கூட ஏற்படாமல் இருக்க மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், பார்வையாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாடுபிடி வீரர்கள் முறையான பயிற்சியுடன் களம் இறக்கப்பட வேண்டும்.காளை உரிமையாளர்கள், வாடிவாசலில் இருந்து அவர்கள் காளைகள் அவிழ்த்துவிடப்பட்டதும், அந்த காளையை மாடுபிடி வீரர்கள் பிடிக்காமல் இருக்கவும், காளையை உற்சாகப்படுத்துவுதாக கூறி அதன்பின்னே ஓடிக் கொண்டே இருப்பார்கள். அப்போது எதிர்பாராத விதமாக அவர்கள் காளைகளே அவர்களை கொம்புகளைக் கொண்டு குத்தி கீழே தள்ளிவிடுகின்றன.

**பாதுகாப்பு விதிகளை மீறுவதால் உயிரிழப்பு:**

பார்வையாளர்கள், கேலரி பகுதியில் அமர்ந்து ஜல்லிக்கட்டு போட்டியை பார்க்காமல் போட்டி நடக்கும் இடங்களை சுற்றிப் பார்ப்பதற்காக கூறி காளைகள் சேகரிக்கும் இடத்திற்கு செல்கின்றனர். அங்கு வாடிவாசலில் இருந்து துள்ளிக்குதித்து மாடுபிடி வீரர்களிடம் இருந்து தப்பி பீதியுடன் ஓடிவரும் காளைகள், பார்வையாளர்களைப் பார்த்ததும், தங்களை அடக்க வருவதாக எண்ணி அவர்களை முட்டி மோதி கீழே தள்ளிவிட்டு ஓடிவிடுகின்றன. மாடுபிடி வீரர்கள், காளைகளை அடக்க ஒன்றிற்கும் மேற்பட்டோர் காளைகள் மீது விழுகின்றனர். அதில் அவர்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு காளைகள் கால்கள், கொம்புகளில் போய் அவர்களாகவே விழுகின்றனர். அதனால், படுகாயம் அடைகின்றனர். சிலர், உயிரிழக்கவும் செய்கின்றனர்.

அதனால், இந்த ஆண்டு போல் உயிரிழப்பு இல்லாத ஜல்லிக்கட்டு தொடரவும், படுகாயங்களை குறைக்கவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும், முன்தயாரிப்பு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மட்டக்களப்பில் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளுக்கு கேக் வெட்ட சென்ற சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண் உட்பட இருவரையும் வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை


(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாளையிட்டு கேக் வெட்டி கொண்டாடச் சென்ற சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பெண் மற்றும் கேக்கை விற்பனை செய்த பேக்கரியில் கடமையாற்றி வந்த ஆண் உட்பட இருவரையும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய 53 நாட்களின் பின்பு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் வியாழக்கிழமை (18) வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்தார்.





கடந்த வருடம் நவம்பர் 26ம் திகதி பட்டிப்பளை கொக்கட்டிச்சோலையை சேர்ந்தவரும் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடாவில் தற்போது வசித்துவரும் பாலிப்போடி உதயகுமாரி என்ற பெண் சம்பவதினமான 26ம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்தநாளையிட்டு நகரத்திலுள்ள பேக்கரி ஒன்றில் பிறந்தநாள் கேக் ஒன்றை வாங்கி அதில் இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் வே.பிரபாகரன் அண்ணா தலைவர் என பெயரை பெறுத்து வாங்கி எடுத்துக் கொண்டு கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்திற்கு சென்றுள்ள நிலையில் அவரை பின் தொடாந்து சென்ற புலனாய்வு பிரிவினர் பொலிசாருடன் இணைந்து அவரை அந்தபகுதி வீதியில் வைத்து கைது செய்தனர்.



இதனையடுத்து குறித்த கேக்கை விற்பனை செய்த மட்டு நகரிலுள்ள பேக்கரியில் கடமையாற்றிவரும் கொக்கட்டிச்சோலையைச் சோந்த 35 வயதுடைய பரமேஸ்வரன் முனீஸ்வரன் என்பவரை கேக்கில் பிறந்தநாள் மற்றும் பிரபாகரனின் பெயரை பொறித்து கொடுத்த குற்றச்சாட்டில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியல் 53 நாட்கள் வைக்கப்பட்ட நிலையில் வியாழக்கிழமை (18) குறித்த இருவரின் வழக்கை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய இவர்களை நீதவான் வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்தார்.

# தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக சுமந்திரன் வந்தால் தமிழ்தேசியத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்கிறார் முன்னாள் எம்.பி யோகேஸ்வரன்




தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஆ.சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக வந்தால் தமிழ்தேசியத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்திவிடும் என முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனிதம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைவருக்கான வேட்பாளர்கள் குறித்து நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம்பெற்றது. இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைவருக்கான வேட்பாளர் தொடர்பில், கிழக்கு மாகாண மக்கள் எவ்வாறு தேசியத்தினை நேசித்து இருக்கின்றனர் என்ற விடயம் தெளிவாக வெளிப்படும். ஏன் ஏன்றால் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்.

தமிழ் தேசியத்தினை பாதுகாக்க வேண்டும். கடந்த காலத்தில் தமிழ் மக்களின் முக்கிய பேச்சாளராக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஆ.சுமந்திரன் தமிழ் மக்கள் மீது வெளியீட்ட கருத்துக்கள் தேசியத்திற்கு ஏதிராக அமைந்து. இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறிதரன் அவர்களை ஆதரிப்பதாக தெளிவாக தெரியப்படுத்தியுள்ளனர்.

நான் வேட்பாளராக இருந்தாலும் எனது வாக்கினையும் அளிப்பேன். தமிழ் தேசியம் பாதுகாக்கும் வரை இறுதி வரை இருப்பேன். வடமாகாண மக்களும் அதனை உணர்ந்து தமிழ் தேசியத்தினை வெற்றி பெறச்செய்யவேண்டும். தமிழ் தேசியத்தினை பாதுகாக்காக பொருத்தமான தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவஞானம் அவர்களே ஆகும்.

எல்லோருக்கும் தெரியும் சர்வதேச ரீதியாக புலம்பெயர்ந்த நாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.சுமந்திரன் அவர்கள் செல்லும் போது அவருக்கு புலம் பெயர்ந்தவர்களிடமிருந்து ஏதிராக கோசங்கள் எழுப்பபட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஆ. சுமந்திரன் தமிழரசுக்கட்சியின் புதியதலைவராக வந்தால் அது தமிழ்தேசியத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்திவிடும்.

பொதுச்சபை உறுப்பினர்களுக்கான வேட்பாளர்களை ஆதரிக்கும் கடிதம் இன்னும் கிடைக்கவில்லை. ஆனாலும் வேறு விதமாக தேர்தல் நடக்குமா என்பது ஏதிர்வரும் 21.01.2024 அன்று தெரியவரும் என்றார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவம் தொடர்பான ஆயத்தப் பணிக்காக கச்சதீவிற்கு சென்ற மாவட்டச் செயலக அலுவலர்கள் மற்றும் பங்குத் தந்தை



கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவம் தொடர்பான முன் ஆயத்தப் பணிக்காக மாவட்டச் செயலகம் மற்றும் பங்குத் தந்தை ஆகியோர் கச்சதீவிற்கு சென்று ஆராய்ந்தனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான உற்சவம் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி நடாத்த திட்டமிடும் நிலையிலேயே இந்த துன் ஆயத்தப் பயணம் இடம்பெற்றது.

இவ்வாறு இடம்பெற்ற பயணத்தில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் மற்றும் பங்குந் தந்தை ஆகியோருடன் கடற்படையினரும் பயணித்துள்ளனர்.

15-01-2024 காலை கச்சதீவு சென்ற குழுவினர் முன்னாயத்தப்பணிகளிற்கான ஏற்பாடுகளின்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் திணைக்களங்களின் வகி பாகம் என்பன தொடர்பில் எதிர்வரும் வாரம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலிற்கான திட்டமிடலிற்கு தேவையான தரவுகளை சேகரிக்கும் வகையிலேயே இப் பயணம் அமைந்துள்ளது என அறியப்படுகின்றது.





# "யுக்திய நடவடிக்கையை நிறுத்தோம்" ஐ.நாவை என சாடிய இலங்கை பொது பாதுகாப்பு அமைச்சர்

இலங்கையில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள, போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான விசேட சுற்றிவளைப்பு தேடுதல் மற்றும் கைது நடவடிக்கையான நடவடிக்கையான "யுக்திய"வை நிறுத்த முடியாது என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கைதுகள் குறித்து கவலை வெளியிட்ட ஐ.நா விமர்சனங்களைப் புறந்தள்ளியுள்ளும் வகையில் அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

"யாருடைய அறிக்கையை அடுத்தும் நாங்கள் நிறுத்த மாட்டோம், அப்படித்தான் நடப்போம்" என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.

அவிசாவளை பிரதேசத்தில் சமூகப் பொலிஸ் குழுவால் கடந்த வார இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பரபரப்புடன் முன்னெடுக்கப்படும் அந்த நடவடிக்கையை "சட்டத்தை அமல்படுத்த மிகவும் கடுமையான வகையில்" முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என ஐ. நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு விமர்சித்துள்ளது. "ஒபெரேஷன் யுக்திய (நீதி)" என பெயரிடப்பட்டு கடந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆரம்பமான நடவடிக்கையில், சந்தேகத்தின் அடிப்படையில் 25,000 அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"யுக்திய" நடவடிக்கையை இலங்கை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், மனித உரிமைகள் அடிப்படையில் இதை அணுக வேண்டும் எனவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டுர்க் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த நடவடிக்கையின் முன்னரும் பின்னரும், மக்கள் ஏராளமான விதிமீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அதில் அனுமதி பெறாமல் சோதனைகளை நடட்துவது, சட்டவிரோத கைதுகள் மற்றும் தடுத்து வைப்பது, மோசமாக நடத்துவது, சித்திரவதை செய்வது மற்றும் பொது இடங்களில் நிர்வாணப்படுத்தி சோதனையிடுவது ஆகியவை இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது" என ஐ நா மனித உரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் லிஸ் தொர்செல் இம்மாதம் 12ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பெயரிடப்படாத சில சட்டத்தரணிகள் மற்றும் அமைப்புகளே ஐ.நாவிற்கு தகவல்களை அளிப்பதாக குற்றஞ்சாட்டிய அமைச்சர், அவர்களை "தேசத்திற்கு எதிராகச் செயற்படும் போலிக் கும்பல்கள்" என்வும் சாடினார்.

"அப்படிச் சிலர் உள்ளனர், அவர்கள் கைநிறைய பணத்திற்காகச் செய்கின்றனர். தன்னார்வ அமைப்பிடமிருந்து பணம் வருகிறது. பணம் வரும் போது அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன".



இலங்கையில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்களை எதிர்கொள்ளும் அரச பாதுகாப்பு படைகளின் இந்த கடும்போக்கு நடவடிக்கையை ஐ.நா கடுமையாக விமர்சித்துள்ளது.

"போதைப் பொருட்களை விற்பவர்கள் அல்லது கடத்துபவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களும் மனிதாபிமான நடவடிக்கைக்கு உரியவர்களே, அவர்களுக்கும் முழு மரியாதையும் வெளிப்படையன வழிமுறைறகளும், நேர்மையான விசாரணைகளும் தேவை" என கூறியுள்ள ஐ.நா, அதேவேளை "அதிகார துஂபிரயோக, சித்திரவதை, மோசமாக நடத்தப்படுதல், மற்றும் நியாயமான விசாரணைகள் மறுக்கப்படுவது போன்று எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகியவை பாரபட்சமின்றி முழுமையாக விசாரிக்கப்பட்டு நீதி வழங்கபப்ட வேண்டும்" எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுவேளை, சமூகத்தை வேவு பார்க்குமாறு நாட்டின் பொலிஸ் மாஅதிபர் வெளிப்படையாகவே கோரியுள்ளார்.

"தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது குழுவின் பிரதான நோக்கமாகும்" என பதில் பொலிஸ் மா அதிபராக இருக்கும் தேசபந்து தென்னகோன் கோரியுள்ளார்.

"ஒவ்வொரு வீட்டிலும் யார் இருக்கின்றார்கள் என கிராம பிரஜா பொலிஸ் குழு உறுதிப்படுத்த வேண்டும். அந்த சமயத்தில்தான் பிரிவினைவாதிகளுக்கு, தீவிரவாதிகளுக்கு, மத பிரிவினைவாதிகளுக்கு எங்கள் பிரதேசத்திற்கு வந்து வாடகைக்கு வீடுகளை எடுத்து அழிவுகரமான செயல்களை மேற்கொள்ள எமது கிராமத்தில் வாய்ப்பில்லை என சான்றுப்படுத்த முடியும்".

கிராம சேவகர்களிடம் இருக்கும் வாக்காளர்கள் பட்டியல் மற்றும் குடியிருப்பாளர்களின் பட்டியலை வைத்துக்கொண்டு உள்ளூர்வாசிகளின் தனிப்பட்ட தகவல்களை பொலிசாருக்கு வழங்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் அந்த குழுவின் உறுப்பினர்களை வலியுறுத்தியுள்ளார்.

# "தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பை அரசு தடுக்காமல் ஒத்துழைப்பாகவே இருக்கின்றது"



**- முன்னாள் தவிசாளர் நிரோஸ்**

மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பை அரச இயந்திரம் தடுக்கவில்லை. மாறாக அதற்கு ஒத்துழைப்பாகவே இருக்கின்றது என்பதனை வெளிப்படுத்துவதற்கு சகல இடங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு மாதவனை பிரதேசத்தில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களப் போரினவாத ஆக்கிரமிப்பிற்கு எதிராக நாம் போராடுகின்றோம். வரலாற்று ரீதியில் எமது மக்களின் நிலங்கள் திட்டமிட்ட பௌத்த சிங்கள மயமாக்கத்திற்கு உட்பட்டே வருகின்றன. அதற்கு அரச இயந்திரமும் ஒத்துழைப்பாக இருந்து வருகின்றது. இலங்கையை இனவாதமற்றதாக அரசாங்கம் வெளியுலகிற்குக் காட்ட எத்தனிக்கும் அதேவேளை ஆரவாரமற்ற வன்முறைகளின் ஊடாக தமிழ் மக்களின் பூர்வீகத்தினையும் அவர்களது பொருளாதாரத்தையும் அழித்து வருகின்றது.

மயிலத்தமடு விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்கள் நடைமுறைப் படுத்தப்படவில்லை. கால்நடைகள் வன்முறையான மிகக் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றன. பண்ணையாளர்கள் தமிழ் மக்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்கள் அதிகார பலத்துடன் பேரினவாத நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் நடைபெறும் ஆக்கிரமிப்பு அல்ல இப்பிரச்சினை. அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத நிகழ்ச்சி நிரலுடனான ஆக்கிரமிப்பு. நாம் வடக்குக் கிழக்கு எமது தாயகம் என்ற வகையில் இன்று யாழில் இவ் ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளோம். தொடர்ந்தும் மயிலத்தமடுவில் போராடும் மக்களுக்கு ஆதரவாக சகல பிரதேசங்களிலும் வெளியுலகின் கவனத்தினை ஈர்ப்பதற்கான பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக பலதரப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என்றார்.


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
aches
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Head-
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருக்குறள் தீபாலங்காரம் நூலை மறுபதிப்பு செய்து வெளியிடுவோம்

## வேளாக்குறிச்சி ஆதீனம் உறுதி



மணப்பாறை பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளையின் சார்பில் புதன்கிழமை மருங்காபுரி அருகில் உள்ள முடுக்குப்பட்டி குறளாலயம் வளாகத்தில் திருக்குறள் தீபாலங்காரம் நூலாசிரியர் மருங்காபுரி ஜமீன்தாரினி கி.சு.வி. இலட்சுமி அம்மணி புகழ் போற்றும் விழா பொங்கல் பெரும் விழா மற்றும் திருவள்ளுவர் திருநாள் ஆகிய முப்பெரும் விழா நடந்தது.

இந்த நிகழ்வில் பங்கேற்று வேளாக்குறிச்சி ஆதீனம் ஆவது குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரியார் சுவாமிகள் பங்கேற்று மதிப்புரை நிகழ்த்தினார்.

அவர் பேசிய உரையின் விபரம்:

தமிழ் மொழி உயர்வான மொழி. அருந்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், ஞானத்தமிழ் என்று அருளாளர் பெருமக்களால் போற்றப்பட்டுள்ளது.

சங்க கால இலக்கியங்கள் மட்டுமல்ல, பக்தி இலக்கியங்கள், பிற்கால இலக்கியங்கள். சிற்றிலக்கியங்கள் கூட தமிழ் மொழிக்கு தனி அணி சேர்த்திருக்கிறது என்றே சொல்லலாம்.

காலம் கடந்து நிற்கக்கூடிய ஒரு மொழி என்றால் அது தமிழ்தான். அதனாலேயே என்னவோ தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியரை, தற்போதைய மேலைநாட்டு மொழிவழி ஆய்வாளர்கள் மிகவும் போற்றுகிறார்கள்.

தமிழ் சமய மொழி மட்டுமல்ல. அது இறைவனுக்கு ஒப்பான இறவாத மொழி. அதனால் தான் திருக்குறளாலயம் என்னும் பெரும் திட்டத்துடன் அரங்கம் அமைப்பது போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் உரியது.

இந்தப் பணியில் ஈடுபட்ட பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளையினர் துணிந்து இறங்கியுள்ளதாக பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். முடிந்தால் முடியாதது எதுவுமில்லை. முயற்சி திருவினையாக்கும். இதுவும் வள்ளுவப் பெருந்தகை சொன்னதுதான்.

இந்த மொழி இலக்கணம் இலக்கண வளமையும், இலக்கியச் செறிவும், தொன்மையையும், தனித்தன்மையையும், பல ஆயிரம் ஆண்டு இயங்கு தன்மையைத் தான் ஒரு மொழிக்கு செவ்வியல் மொழி என்ற அடையாளத்தைத் தருகிறது.

அதற்கு முழு வடிவமாக, முழு இயல்பாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்து, வழக்கு மொழியாக இயல்பு மொழியாக இருப்பது தனித்தமிழ் ஒன்றே என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

இதுபோன்ற குறளாலயம் எழுப்பிடும் தொண்டறம் சிறக்க வேண்டும்.

நமது முந்தைய சந்நிதானம் சொல்வார், ஆதீனங்களின் கட்டுப்பாட்டில் கோயில் நிலங்கள் இருப்பதால் அது இன்னமும் விவசாயத்திற்கு தன்மை மாற்றப்படாமல் பயன்படுகிறது என்று பெருமிதம் கொள்வார்.

அதுபோல வேளாக்குறிச்சி ஆதீனத்தின் அருளாட்சிக்கு உள்பட்ட திருச்செங்காட்டாங்குடியில் முந்தைய வெள்ளத்தின் போது ஊரே வெள்ளக்காடானது. அப்போது, ஆட்களை அழைத்துக் கொண்டு போய் கோயிலில் இருந்த நெல் மூட்டைகளை சமைத்து, அம்மக்களின் பசியாற்றினோம்.

ஆலயங்கள் வழிபடுவதற்கு மட்டுமல்ல. அது தேவைப்படும் போது அறச்சாலைகளாக இருக்கும்.

ஆதீனங்கள் தமிழ் மொழியை வளர்த்தார்கள் என்பதைவிட, தமிழ் மொழியால் ஆதீனங்கள் வளர்ந்தன என சொல்லலாம்.

குறளாலயம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இங்கு திருக்குறள் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அதேபோல 1928-இல் திருக்குறள் தீபாலங்காரம் நூல் எழுதிய மருங்காபுரி ஜமீன்தாரினி கி.சு.வி. இலட்சுமி அம்மணி புகழ் போற்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், மணக்குடையர், அருணாசலக்கவிராயர், நாமக்கல் கவிஞர் இப்படி அனைவரும் உரை தான் எழுதினார்கள். ஆனால், மருங்காபுரி ஜமீன்தாரினி தான் "திருக்குறள் தீபாலங்காரம்" என பெயர் வைத்தார்.

திருக்குறள் படித்தால் அக இருள் நீங்கி, தீப ஒளியாய் ஒளிரும் என்பது தான் அம்மையாரின் உட்பொருள்.

ஆகவே, அம்மையார் அவர்களின் திருக்குறள் தீபாலங்கார நூலை வேளாக்குறிச்சி ஆதீனம் மறுபதிப்பு செய்து வெளியிடும். மேலும், கூட்டம் நடத்துவதற்கு வசதியாக அரங்கம் கட்டித்தருவதற்கும் நமது ஆதீனம் முயலும் என்றார் வேளாக்குறிச்சி ஆதீனம்.

முன்னதாக திருவள்ளுவர், ஜமீன்தாரினி அம்மையார் படங்களுக்கு வேளாக்குறிச்சி ஆதீனம் மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தினார்.

இந்நிகழ்விற்கு மணப்பாறை சிந்துஜா மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் பெ.கலையரசன் அவர்கள் தலைமையேற்றார்.

பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளையின் செயலாளர் வழக்கறிஞர் ஆ.தமிழ்மணி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளையின் நிறுவன அறங்காவலர் மணவை தமிழ்மாணிக்கம் அவர்கள் நிகழ்வினை ஒருங்கிணைத்தார்.

தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப் பற்றாளர், தமிழ்ச் செம்மல் விருது பெற்ற மணவை திருக்குறள் பயிற்றக நிறுவனர், திருக்குறள் புலவர் நாவை. சிவம் அவர்களுக்கு பாராட்டும், பட்டயமும் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் சுளுந்தீ நாவலாசிரியர் இரா. முத்துநாகு, மணவைத் தமிழ் மன்றத் தலைவர் புரவலர் சௌமா ராசரத்தினம், மருங்காபுரி ஜமீன்தார் சிவசண்முக பூச்சய நாயக்கர், மயிலாடுதுறை தமிழ்ச்சங்கத் தலைவர் ஜெனிபர் ச. பவுல்ராஜ், நந்தவனம் மாத இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகர், டாக்டர் பி.எம். ராமச்சந்திரன், மணவை இலக்கிய வட்டம் நிறுவனர் கவிஞர் மு.மு. அஷரப் அலி, மணவைத் தமிழ்மன்றச் செயலாளர் கவிஞர் கோ. நவமணி சுந்தரராசன், ஆசிரியர் விழிகள் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றினார்கள்.

பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளையின் அறங்காவலர்கள் ஆ. துரைராஜ், எம்.கே. முத்துப்பாண்டி, இரா. கார்த்திகேயன் சி. ராஜகோபால், இரா. கலைக்கோவன், தமிழ் ஆர்வலர்கள் எம்.ஆர். பாலுசாமி, சரவண கணேசன், வைகோ பழனிச்சாமி, பா. பாதுஷா, புஷ்பா சுப்ரமணியன், சி. பீட்டர், ப. சுப்ரமணியன், மேட்டுக்கடை பொ. சண்முகம், எஸ். தர்மராஜ், டி.வி.எஸ். பொன்னுச்சாமி, மருதை, மோகன் பெரியகருப்பன், ஆரோக்யரெக்ஸ் தன்ராஜ், க. அண்ணாத்துரை, நா. ரேணுகாதேவி இராமசாமி, ஆசிரியர் மன்னர் மன்னன், இளையராஜா, காவிரி இலக்கியப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பிரபு, நா. சண்முகம், மணவை தமிழ்ஹரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் நிறைவில் வேளாக்குறிச்சி ஆதீனம், கவிஞர் மு.மு. அஷ்ரப் அலி, ஜெனிபர் பவுல்ராஜ் ஆகிய மூவரும் இணைந்து மரக்கன்றுகளை நட்டது சிறப்புக்குரியது.

THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கான நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தொடர் சட்ட போராட்டம்!

உலக செய்திகள்
World News

Ministry of Media
Transnational Government of Tamil Eelam
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
ஊடக அமைச்சு
875 Avenue of the Americas, Suite 906
New York, NY 10001, USA
www.tgte.org
media.team@tgte.org

மௌனிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் மீதான நீதியற்ற தடையை சவாலுக்குட்படுத்தவும், சிறீலங்காவில் இனவழிப்புக்கான மறைமுக ஆதரவை இல்லாமல் செய்யவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது தடை செய்யப்பட்ட அமைப்புகளின் மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் மேன்முறையிட்டிருந்தது.

பிரித்தானிய உள்துறை செயலாளர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்த முறைமையானது நீதிக் கோட்பாடுகளுக்கு முரணானது என்றும், அதன் காரணமாக சட்ட வலுவற்றது என்றும்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் 21ஆம் திகதி ஆணைக்குழு தீர்ப்பளித்து இருந்தது. அச் சட்டவிரோதச் செயலுக்கு பரிகாரமாக, பிரித்தானிய உள்துறை செயலாளர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை தொடர்பான முடிவை மீள் பரிசீலனை செய்யும்படி உத்தரவிட்டு இருந்தது.

பிரித்தானிய உள்துறை செயலாளர் மீண்டும் கடந்த 2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குள் பேணும் தனது முடிவை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார். இந்த முடிவிற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மேன்முறையீடு செய்திருந்தது.

2022ம் ஆண்டு மேன்முறையீடு செய்திருந்த இந்த வழக்கு 2024ம் ஆண்டு மார்ச் 12ம் திகதி நீதிமன்றத்திற்கு வருகின்றது.

நீதியற்ற இந்த தடையை நீக்கும் செயற்பாடுகள் மற்றும் சட்ட சவாலுக்கான இந்த மேன்முறையீடானது அடுத்த கட்டத்துக்கு நகர்வது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கடமை என்பதை உணர்ந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இந்த நீதி போராட்டத்திற்கு அனைவரும் கரம் கொடுப்போம்.

நீதியற்ற இந்தத் தடையை நீக்க உலகம் பூராகவும் வாழும் பல்லின மக்களிடம் இருந்தும் நிதி பங்களிப்பை பெறுவதற்காக கீழ்வரும் இணையத்தளம் ஜனவரி 14ந் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

https://www.crowdjustice.com/draft/10043/r/BeoKFnu3R2CdmqI4HRWxrg/

ஊடக அமைச்சு,
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்
(416) 830-4305

# சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட் அம்மையார் "இமாலயப் பிரகடனத்தை" ஆதரிப்பதை விட, தமிழர் சுயநிர்ணயத்திற்கு தனது ஆதரவை வழங்குமாறு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள், வலியுறுத்துகின்றனர்

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்கள், சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட் அம்மையார் "இமாலயப் பிரகடனத்தை" ஆதரிப்பதை விட, தமிழர் சுயநிர்ணயத்திற்கு தனது ஆதரவை வழங்குமாறு வலியுறுத்துகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளை, கண்டறியவும் எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், தமிழர் இறையாண்மைக்காக அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறவும் எமது தொடர் போராட்டத்தின் 2521 நாளாகும்.

வவுனியா நீதிமன்றம் முன் ஏ-9 வீதியில் அருகாமையில் இந்த பந்தலில் எமது பயணம் தொடர்கிறது.




"இமாலயப் பிரகடனம்" என்ற காலாவதியான கருத்தை ஒற்றையாட்சியை ஊக்குவிப்பதை விட, பொதுவாக்கெடுப்பை ஆதரிக்கவும், தமிழர்களுக்கு சுயநிர்ணயத்திற்கான வாய்ப்பை வழங்கவும் சுவிஸ் ஜனாதிபதி வயோலா அம்ஹெர்ட்டை நாங்கள் கடுமையாக ஊக்குவிக்கிறோம்.

"இமாலயப் பிரகடனத்தில்" பங்கேற்பாளர்கள் சம்பந்தப்பட்ட சமீபத்திய ருளுவுயுபு சந்திப்பின் போது, அமெரிக்காவில் USTAG இலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட திரு. எலியாஸ் ஜெயராஜா ஒரு அறிவிப்பை வெளியிட்டார். "இமாலயப் பிரகடனம்" தொடர்பான பணிகளுக்காக தங்கள் குழு சுவிஸ் அரசிடம் இருந்து நிதியுதவி பெற்றதாக அவர் வெளிப்படுத்தினார். கூடுதலாக, "இமாலயப் பிரகடனத்தில்" பௌத்த குருமார்கள் பங்கேற்பதற்கு சுவிட்சர்லாந்து நிதியுதவி அளித்தது.

ஜனாதிபதி அம்ஹெர்ட் அம்மையார், "இமாலயப் பிரகடனத்திற்கு" நிதி உதவி வழங்குவதை நாம் எதிர்க்கிறோம். இந்த பிரகடனம் பன்மைத்துவ சமூகத்துடன் கூடிய ஒற்றையாட்சி அரசை உருவாக்க முயல்கிறது, இது சிங்கள சமூகத்திற்கு சாதகமாக அமையும் மற்றும் தமிழ் மக்களின் நல்வாழ்வை பாதிக்கும். தமிழர்கள் ஒற்றையாட்சிக்குள் சிங்களவர்களுடன் சகவாழ்வு வாழ்ந்தால் அது அவர்களின் உயிர்வாழ்விற்கான நேரடி அச்சுறுத்தலாகும். அதாவது ஓநாய்களுடன் வாழும் கோழிகளைப் போன்றது.

பல்வேறு தமிழ் போராட்டக் குழுக்களுக்கு கணிசமான தொகையை உதவி என்ற பெயரில் வழங்கிய சுவிஸ் இராஜதந்திரிகளின் நடவடிக்கைகள், அந்த குழுக்களை பலவீனப்படுத்துவதற்கு இட்டுச் சென்றது.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி தமிழ்த் தாய்மார்கள் முன்னெடுத்த வீதியோரப் போராட்டம் 500ஆவது நாளான அன்று திடீரென நிறுத்தப்பட்டதை அவதானிக்க முடியும். அவர்களின் பொது ஆர்ப்பாட்டத்தைத் தொடர்வதற்குப் பதிலாக, அவர்களுக்கு அலுவலக இடம் வழங்கப்பட்டது மற்றும் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு (UNHRC) பல சந்தர்ப்பங்களில் செல்ல வாய்ப்பு வழங்கப்பட்டது. இருப்பினும், சுவிஸ் அரசாங்கத்திடமிருந்து சில சலுகைகளைப் பெற்ற பிறகு, குழுவிற்குள் உள் முரண்பாடுகள் வெளிப்பட்டன.

13வது திருத்தம், நல்லிணக்கம், சமஸ்டி, ஒன்றுபட்ட மற்றும் பிரிக்க முடியாத இலங்கை என்று வாதிடுபவர்கள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், சர்வஜன வாக்கெடுப்பு கோராமல் சிங்களவர்களுடன் நேரடியாகப் பேச்சு நடத்துபவர்கள் இருக்கிறார்கள். இந்த முன்னோக்குகள் பெரும்பாலும் வெளிநாட்டு அரசாங்கங்களால் நிதி ரீதியாக ஆதரிக்கப்படுகின்றன. அல்லது அவற்றுடன் இணைந்த பேுழ நிறுவனங்கள் மூலம் எளிதாக்கப்படுகின்றன.

சுவிஸ் மற்றும் பிற அரசாங்கங்கள் செல்வாக்குமிக்க தமிழ் குழுக்களை பலவீனப்படுத்துவதற்கும் பிளவுபடுத்துவதற்கும் பங்களிக்கும் சில அரச சார்பற்ற நிறுவனங்களை ஆதரிக்கின்றன. இதன் விளைவாக, இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் போர்க்குற்றங்கள் மற்றும் தமிழர் அபிலாஷைகளுக்கான சர்வதேச நீதி பற்றிய விவாதங்களை மறைக்கின்றன. இது தொடர்பான போக்கு சில தமிழர்களிலும் காணப்படுகின்றது.

"நல்லிணக்கம்" என்றழைக்கப்படுவதை நாங்கள் நம்பவில்லை, ஏனெனில் இது தமிழர்களின் நிலங்களை அபகரிக்கும் ஒரு மாறுவேட முயற்சியாகத் தெரிகிறது. அரசியல் தீர்வு காண்பதில் தமிழர்களில் எவரும் ரணிலையோ அல்லது எந்த சிங்களத் தலைவரையும் நம்புவதில்லை. கடந்த 75 வருடங்கள் இதற்கான தெளிவான சான்றுகளை வழங்குகின்றன.

இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும், போரினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும் இடையே பொதுவாக்கெடுப்பு நடத்த சுவிஸ் வளங்களை ஒதுக்குமாறு சுவிட்சர்லாந்து ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்.

நமது இறையாண்மையை மீண்டும் பெறுவதன் முக்கியத்துவத்தை ஊக்குவிக்க உலகளாவிய பிரச்சாரத்தை நாம் தொடங்க வேண்டும். அமைதி மற்றும் பாதுகாப்பை அடைவதற்கு, குறிப்பாக சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும் எல்லைகளைக் கொண்டிருப்பதன் மூலம் நமது இறையாண்மையை மீட்டெடுப்பது மிகவும் முக்கியமானது.

முக்கியமாக, காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை திரும்பட கண்டறிந்து நீதியை அடைவதற்கு தேவையான சக்தியையும் பலத்தையும் இறையாண்மை வழங்கும்.

சுவிட்சர்லாந்தின் ஜனாதிபதியாக நீங்கள் ஒரு ஜனநாயக நாட்டில் தலைமைப் பதவியை வகிக்கிறீர்கள். எனவே, வாக்கெடுப்பு என்பது நேரடி ஜனநாயகத்தின் ஒரு வடிவமாக இருப்பதால், நீங்கள் தமிழர் பிரச்சினையை ஆதரிப்பது மட்டுமல்லாமல், பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. செழுமையான தமிழ் கலாச்சாரத்தையும், அதன் அடையாளங்களையும், மொழியையும், வடக்கு கிழக்கில் உள்ள அவர்களின் பூர்வீக நிலங்களையும் அழிக்க முயலும் தமிழர் விரோத வேலைத்திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் மண்பானைப் பொங்கல் பொதிகள் வழங்கிவைப்பு

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கலை முன்னிட்டு நாவாந்துறையைச் சேர்ந்த எழுபது குடும்பங்களுக்குப் பொங்கல் பொதிகளை வழங்கி வைத்துள்ளது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் பொ .ஐங்கரநேசன் தலைமையில் வெள்ளிக்கிழமை (12-01-2024) இப்பொதிகள் வழங்கும் நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு அனுசரணையோடு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் அற்றார் அழி பசி தீர்த்தல் என்ற திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. பகிர்ந்துண்டு வாழ்வோம் என்ற கருப்பொருளுடன் கொரோனாப் பெருந்தொற்று ஏற்பட்ட காலத்தில் இருந்து இடம்பெற்றுவரும் இத்திட்டத்தின் தொடர்ச்சியாகவே பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தைப்பொங்கல் இயற்கையைப் போற்றுகின்ற தமிழ்ப் பண்பாட்டுப் பெரு விழா என்பதையும், அலுமினியப் பானைகளில் சமைப்பதால் ஏற்படக்கூடிய பாதகங்களையும் கருத்திற் கொண்டு அனைவருக்கும் மண்பானைகளுடன் பொங்கற் பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதி அனுசரணையை கனடாவில் உள்ள இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் சார்பில் ந.கேதீஸ்வரசிவம், பி.எஸ். சுதாகரன் ஆகியோர் வழங்கியிருந்தார்கள்.





# நாட்டை கட்டியெழுப்ப தற்போதைய பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவது அவசியமானதாகும்

## சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் (IMF) தெரிவிப்பு

நாட்டிற்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு 14.01.2024 அன்று வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்களை சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு, வர்த்தகப் பிரதிநிதிகள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகள் என பலரும் இந்த சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத்தை (IMF) பிரதிநிதித்துவப்படுத்தி, சிரேஷ்ட பிரதம அதிகாரி தலைமையில் நிரந்தர வதிவிட பிரதிநிதி, சிரேஷ்ட பொருளியலாளர், சிரேஷ்ட நிதித்துறைசார் நிபுணர், பொருளியலாளர், உள்ளூார் பொருளியலாளர் உள்ளிட்ட குழுவினர் இன்றைய சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், காலநிலை மாற்றம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து வடமாகாண கௌரவ ஆளுநர், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு தெளிவுப்படுத்தினார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல், கொவிட் தொற்றுக்கு பின்னரான நிலை, பொருளாதார நெருக்கடி, வரி அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு இதன்போது கருத்துக்களை முன்வைத்தனர். இந்த விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின்படி நாட்டில் ஊழல் ஒழிப்பு சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், விநியோக கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும், நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் குழு ஆலோசனைகளை முன்வைத்தனர்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக செயற்பாடுகளுக்கு புதிய வரிக்கொள்கை பாரிய சுமையாக அமைந்துள்ளதென வர்த்தகப் பிரதிநிதிகளும், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் பிரதிநிதிகளும் தெரிவித்தனர். வங்கிகளில் கடன்களை பெறுவதிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதுடன், வங்கி வட்டி வீதங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் தங்களின் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இலங்கையில் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளமையை தாம் அறிந்துக்கொண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதம அதிகாரி பீற்றர் ப்ரூர் (PETER BREUER) தெரிவித்தார். கடந்தகால பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவே நாடு இவ்வாறான நிலையை அடைந்துள்ளதாகவும், நிலைமையை மாற்றியமைக்க குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இறுக்கமான கொள்கைகளை பின்பற்றுவது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கடந்த வருடத்தின் இறுதியில் நல்ல சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த மாற்றங்கள் தொடர வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதம அதிகாரி தெரிவித்தார்.





MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# இஸ்ரேலுக்கு எதிராக தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கு: ஈழத் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டியவை

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



**தெ**ன்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கின்றது. பலஸ்தீனத்தில் இஸ்ரேல் இனப்படுகொலை செய்கின்றது என்பது தென்னாபிரிக்காவின் குற்றச்சாட்டு.

இதுபோன்று ஏற்கனவே ஒரு வழக்கு பர்மிய அரசாங்கத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருக்கிறது. ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த கம்பியா அந்த வழக்கை 2019இல் தொடுத்தது. இந்த இரண்டு வழக்குகளும் அனைத்துலக நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள். இந்த இரண்டு வழக்குகளையும் தொடுத்தது ஆப்பிரிக்க கண்டத்தில் இருக்கும் நாடுகள்.

தென்னாபிரிக்காவின் இந்த நகர்வானது இனப்படுகொலைக்கு உள்ளாகும் அல்லது உள்ளாகிய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய ஒன்று. நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படியும் அமையலாம்.அது ரோகியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான வழக்கில் நடந்தது போல பொருத்தமான நீதியை பெற்றுக் கொடுக்கத் தவறலாம். உலக அரசியலில் தூய நீதி எதுவும் கிடையாது. போருக்கு பின்னரான சமூகங்களில் பொறுப்புக் கூறும் நோக்கத்தோடு ஐநா முன்வைக்கும் நிலை மாறு கால நீதியும் கூட தூய நீதி அல்ல. அது ஒரு அரசியல் நீதி, அது ஓர் அரசியல் தீர்மானம். யார் யாருக்கு எதிராக வழக்கு தொடுப்பது? யார் யாரைக் கூப்பிட்டு விசாரிப்பது? போன்ற எல்லாவற்றிலுமே அரசியல் தீர்மானங்கள் உண்டு. எல்லா அரசியல் தீர்மானங்களும் ராணுவ பொருளாதார ராஜதந்திர நலன்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றவை. நிச்சயமாக அறநெறிகளின் அடிப்படையில் நீதிநெறிகளின் அடிப்படையிலோ அல்ல. அதற்குப் பின்வரும் உதாரணங்களைக் காட்டலாம்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவும் உலக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நாடுகளும் உட்பட ஆபிரிக்க நாடுகள் எவையும் இன்றுவரையிலும் உக்ரைனை ஆக்கிரமிக்கும் ரஷ்யாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவில்லை. ஏனெனில் ரஷ்யா, ஆபிரிக்காவை அதிகம் அரவணைத்து வருகின்றது.

அதுபோலவே ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்து சிறிது காலத்திலேயே மேற்கு நாடுகள் அங்கு நடப்பது இனப்படுகொலை என்று குற்றம் சாட்டின. ஆனால் இன்றுவரை காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று எந்த ஒரு மேற்கு நாடும் கூறவில்லை. அது மட்டுமல்ல, இஸ்ரேலுக்கு எதிரான தென்னாபிரிக்காவின் நடவடிக்கைக்கு இதுவரையிலும் எந்த ஒரு மேற்கு நாடும் ஆதரவு தெரிவிக்கவில்லை. இத்தனைக்கும் அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்போது அதற்குரிய ஆரம்ப ஏற்பாடுகளில் அதிகம் ஈடுபட்டது பிரித்தானியாவும் அமெரிக்காவுந்தான்.

அவ்வாறு இஸ்ரேலுக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கை ஆதரிக்காத அதே மேற்கு நாடுகள்தான் கடந்த 12 ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அல்லது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன.

எனவே இங்கே யாருக்கு எதிராக யார் வழக்கு தொடுப்பது என்பதனை அறநெறிகளை விடவும் நீதி நியாயங்களை விடவும் புவிசார் மற்றும் பூகோள அரசியல் நலன்கள் தான் தீர்மானிக்கின்றன. இந்த விடயத்தில் பலஸ்தீனர்கள் ஈழத் தமிழர்களைவிடப் பலமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஐநாவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அதிகார சபை உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உண்டு. ஐநாவில் அவர்களுடைய குரல் பலவீனமாகவேனும் ஒலிக்கின்றது. ஐநாவில் அவர்களுக்கு ஆதரவாக இஸ்லாமிய நாடுகள் உண்டு.

ஆனால் ஈழத் தமிழர்களின் நிலை அவ்வாறில்லை. இறுதிக் கட்டப் போரில் ஏறக்குறைய முழு உலகமும் ஒன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஈழத் தமிழர்களுக்கு எதிராக நின்றது.

அன்றைக்கு உலகில் பெரும்பாலான நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நின்றன. அல்லது ஈழத் தமிழர்களுக்கு எதிரான தரப்புக்களோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுச் சேர்ந்திருந்தன. ஐநா, போரில் நேரடியாக தலையிடாமல் விட்டதன் மூலம் இனப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்தது.

இந்தியாவும் சீனாவும் பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகள் அல்ல. ஆனால் இரண்டு நாடுகளுமே ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரு கோட்டில் நின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் எதிரிகள். ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. சீனாவும் அமெரிக்காவும் உலக அளவில் ஒன்றுக்கொன்று எதிரான அரசியலைக் கொண்டிருப்பவை. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இரண்டும் ஒன்றாக நின்றன. உலகில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் தங்களுக்கு இடையே பகைவர்களாகக் காணப்படும் நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒன்றாக நின்றன.

பெரிய நாடுகள் மட்டுமல்ல, இப்பொழுது இனப்படுகொலைக்கு உள்ளாகும் பாலஸ்தீனம் 2009 இலும் அதற்குப் பின்னரும் ஈழத் தமிழர்களின் விடயத்தில் எந்த அறத்தின் அடிப்படையில் நிலைப்பாடுகளை எடுத்தது? பலஸ்தீன சுயாட்சி அதிகாரசபை எனப்படுவது ஒடுக்கப்படும் ஒரு தரப்பு என்ற அடிப்படையில் மற்றொரு ஒடுக்கப்படும் தரப்பாகிய ஈழத் தமிழர்களைத்தான் ஆதரிக்க வேண்டும். ஆனால் அவர்கள் ஈழத் தமிழர்களை ஆதரிக்கவில்லை. 2009 இல் மட்டுமல்ல அதற்குப் பின்னரும் பலஸ்தீனம் ஈழத் தமிழர்களின் பக்கம் இல்லை. அவர்கள் மகிந்தவின் பக்கம்தான் நிற்கின்றார்கள். 2009 மே மாதத்திற்கு பின்னர்தான் அவர்கள் மகிந்தவை பலஸ்தீனத்துக்கு அழைத்து அங்குள்ள உயர் விருது ஆகிய "பலஸ்தீன நட்சத்திரம்" என்ற விருதை அவருக்கு கொடுத்தார்கள். அங்குள்ள சாலை ஒன்றுக்கு அவருடைய பெயரையும் சூட்டினார்கள். இந்த முரண்பாட்டை எப்படி விளங்கிக் கொள்வது?

பலஸ்தீனம் மட்டுமல்ல கியூபாவும்கூட ஈழத்தமிழர்களின் பக்கம் இல்லை. கியூபா ஆயுதப் போராட்டத்தின் மூலம் வெற்றி பெற்ற ஒரு முன்னுதாரணம். அந்த முன்னுதாரணத்தை 1980களில் ஈழ விடுதலை இயக்கங்கள் பெரிதும் போற்றின. சில இயக்கங்கள் தமது முக்கிய பொறுப்புக்களை வகித்த நபர்களுக்கு காஸ்ட்ரோ என்று பெயரையும் வைத்தன. ஆனால் கியூபா, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இனப்படுகொலையின் போது யாருடைய பக்கம் நின்றது? ஐநா தீர்மானங்களில் யாருடைய பக்கம் நிற்கின்றது?

2009க்கு பின் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக முதலாவது தீர்மானம் முன்வைக்கப்பட்ட பொழுது அதை எதிர்த்துப் பேசிய கியூபப் பிரதிநிதி ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். அப்பிரேரணையை முன்வைக்கும் பெரும்பாலான மேற்கு நாடுகள்தான் இலங்கை அரசாங்கத்துக்கு போர் புரியத் தேவையான ஆயுதங்களில் 60 விதமான ஆயுதங்களை வழங்கினஎன்று அவர் சொன்னார். அவ்வாறு போர் புரிய ஆயுதங்களை வழங்கிவிட்டு இப்பொழுது அந்தப் போரில் குற்றங்கள் இடம் பெற்றதாகக் கூறி இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தீர்மானங்களை கொண்டு வருகிறீர்கள் என்றும் அவர் குற்றம் சாட்டினார். அதுதான் உண்மை.

கடந்த 15 ஆண்டுகளாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் மேற்கு நாடுகள் இலங்கை தொடர்பான தீர்மானங்களை முன்மொழிந்து வருகின்றன. தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு எதிரானவையா? அல்லது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானவையா? என்று கேட்டால் முதலாவது அர்த்தத்தில் அவை இலங்கை அரசுக்கு எதிரானவைதான். இலங்கை அரசாங்கம் சீனாவை நோக்கிப் போவதில் உள்ள வரையறைகளை உணர்த்துவதே ஐநா தீர்மானங்களின் உள்நோக்கம் ஆகும். ஆனாலும் அனைத்துலக அரங்கில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரானவை அனைத்தும் ஈழத் தமிழர்களுக்கு சாதகமானவைதான். அந்த தர்க்கத்தின் அடிப்படையில் பார்த்தால், ஐநா தீர்மானங்கள் ஈழத் தமிழர்களுக்குச் சாதகமானவை. அதாவது, புவிசார் அரசியல் மற்றும் பூகோள அரசியல் அர்த்தத்தில், எல்லா ஐநா தீர்மானங்களும், புவிசார் மற்றும் பூகோள அரசியல் நோக்குநிலைகளில் இருந்து உருவாக்கப்பட்டவைதான். சில சக்திமிக்க நாடுகள் இலங்கை மீது தமது பிடியைப் பலமாகப் பேணுவதற்கு ஈழத் தமிழர்களின் காயங்களை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்துகின்றன என்பதே நடைமுறை உண்மையாகும்.

கடந்த 15 ஆண்டுகளாக ஈழத் தமிழர்களுக்கு பொருத்தமான நீதி எதுவும் கிடைக்காமல் போனதற்கு அதுதான் காரணம். கடந்த ஆண்டு ஜெனிவா தீர்மானத்தின் பிரகாரம் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான ஒரு பொறிமுறை மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்தில் இயங்கி வருகின்றது. அது ஈழத் தமிழர்கள் கேட்ட ஒரு பொறிமுறை அல்ல. அது மிகவும் பலவீனமானது. ஆனாலும் அது இலங்கை அரசாங்கத்திற்கு எதிரானது.

இப்படிப்பட்டதோர் அனைத்துலகப் பின்னணியில் காசாவில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கும் பொழுதே தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறது என்பது ஒரு முக்கியமான திருப்பம். இது பலஸ்தீனர்கள் ஈழத் தமிழர்களைவிட ஒப்பீட்டளவில் பலமாக இருப்பதைக் காட்டுகின்றது. தென்னாபிரிக்காவின் அமெரிக்காவுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டையும் அது பிரதிபலிக்கின்றது.

வழக்கின் முடிவுகள் எப்படியும் அமையலாம். அனைத்துலக நீதிமன்றம் எனப்படுவது ஐநாவின் உறுப்புகளில் ஒன்று. ஐநாவின் ஆறு பிரதான உறுப்புக்களில் அதுவும் ஒன்று. அந்த நீதிமன்றத்தின் தீர்ப்புகள் ஐநா பொதுச் சபையிலும் ஐநா பாதுகாப்பு சபையிலும் விவாதிக்கப்படும். அங்கே குறிப்பாக ஐநா பாதுகாப்பு சபையில் வீற்றோ அதிகாரமிக்க நாடுகள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டால் மட்டுந்தான் அது நடைமுறைப்படுத்தப்படும். அவை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அந்தத் தீர்ப்பு அடுத்த கட்டத்திற்கு நகராது. பர்மாவில் ரோஹியங்கா முஸ்லிம்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகியபோது அதற்கு எதிராக கம்பியா தொடுத்த வழக்கிலும் இது நடந்தது.

ஐநா பொதுச் சபையோ பாதுகாப்பு சபையோ எடுக்கக்கூடிய எந்த ஒரு முடிவும் சக்திமிக்க நாடுகளின் வீற்றோ அதிகாரத்தில் தங்கியிருக்கின்றது. வீற்றோ அதிகாரம் எனப்படுவது உலகப் பொது மன்றமாகிய ஐநா சமனற்றது; எல்லாருக்கும் சமமான நீதியை வழங்கக்கூடியது அல்ல என்பதனை உணர்த்துவது. ரோகிங்கா முஸ்லிம்களின் விடயத்தில் சீனா பர்மாவுக்கு ஆதரவாக அதன் வீற்றோ வாக்கு அதிகாரத்தை பயன்படுத்தும். இஸ்ரேலின் விடயத்திலும் அமெரிக்கா அதைச் செய்யும். அதாவது இறுதியிலும் இறுதியாக ஐநாவின் நீதி எது என்பதனை வீற்றோ அதிகாரந்தான் தீர்மானிக்கப் போகின்றது. நிச்சயமாக அறநெறிகளோ நீதி நெறிகளோ அல்ல.

----------------------------------------------------

## வீணாவின் கவிக்கணை

சிந்திக்க வேண்டிய
சில தருணங்களில்
சிந்திக்கத் தவறியதால்,
சந்திக்க நேர்ந்திட்டது பல
சங்கடமான நிகழ்வுகள்,
சட்டென்று முடிவெடுக்காமல்
சற்றே சிந்தித்து
சுய புத்தியுடன் முடிவெடுத்திருந்தால்
சங்கடமில்லாமல் வாழ்ந்திடலாம்.


Happy
Tamil Heritage
Month
அனைவருக்கும்
இனிய தமிழ்
மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்!
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org



உரும்பிராய் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா
பெருமையுடன் வழங்கும்
உரும்பிராய் பாடசாலைகளின்
30ஆவது ஆண்டு பொங்கல் விழா - 2024
சனிக்கிழமை, ஜனவரி 20ஆம் திகதி 2024 மாலை 5:00 மணி
PONGAL VIZHA
Saturday, January 20th 2024 @ 5:00pm
Thamil Isai Kalaamantram
#3 - 1120 Tapscott Road, Scarborough
பொங்கல் விழாவில் இயல், இசை நாடக நிகழ்வுகளை கண்டு களிக்க அரியதோர் வாய்ப்பு
திரு.மோகனசுந்தரம் அவர்களின் காமெடி பேச்சு சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்.
மேலதிக விபரங்களுக்கு:
416 258 5196 | 416 805 7392
416 833 7729 | 647 710 7816
urumpiraischoolsosa.ca@gmail.com




Lankasri
தமிழ் மரபுத் திங்கள்
MOIS DU PATRIMOINE TAMOUL
TAMIL HERITAGE MONTH 2024
தை மாதம் 21ம் திகதி 2024
ஞாயிறு காலை 10 மணிக்கு
JAN 21st 2024
Sunday 10:00AM
LE CHATEAU ROYAL
3500 BLVD DU SOUVENIR, LAVAL, QC H7V 1X2
'ஒற்றுமையே எங்கள் பலம்'
Vedan Sports Club
மேலதிக தொடர்புகளுக்கு : 514 360 8511




இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040
raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca

குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

## மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் தைப்பூச திருநாள் சிறப்பாக நடைபெறவுள்ளது




**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**

**(416) 436-9647**

------------------------

21-01-2024 ஞாயிற்றுக்கிழமை காலை மாலை அணியும் சக்திகள் மாலை அணிந்து ஐந்து நாட்கள் பூசைகள் நடைபெறும்.

24-01-2024 புதன்கிழமை காலை பௌர்ணமி பூசை சிறப்புடன் நடைபெறும்.

25-01-2024 வியாழக்கிமை தைப்பூசத்துடன் முடிவடையும்.
காலை 8:00 மணி தொடக்கம் சிறப்பு பூசைகள் நடைபெற்று,
மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

09-02-2024 வெள்ளி காலை தை அமாவாசை பூசை சிறப்பாக நடைபெறும்.

அன்னையின் அருள் வேண்டி சிறப்புடன் வாழ
அனைத்து சக்திகளையும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
அத்துடன் நீங்கள் விரும்பிய வேப்பிலை, பழம், பூ என்பன கொடுத்துதவலாம்.
செடி வளர முதலில் விதை வேண்டும், அந்த விதையை ஊன்ற மனம் வேண்டும்.
அந்த விதையை ஆழமாக ஊன்ற வேண்டும். அது நன்கு வளரவதற்கு
தண்ணீர் ஊற்ற வேண்டும். எந்த அளவிற்கு ஆழமான ஈடபாடு இருக்கின்றதோ.
அந்த அளவிற்குத் தக்கபடி பயன் கிடைக்கும்.




**Nick Mantas**

**Councillor**

**Ward 22, Scarborough-Agincourt**

100 Queen Street West, Suite A1
Toronto, ON M5H 2N2
Phone: (416) 392-1374
Fax: (416) 392-7431
Nick.Mantas@toronto.ca

இனிய தைப்பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள் நல்வாழ்த்துக்கள்

**Happy Thai Pongal & Tamil Heritage Month**







இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் உலருணவுப் பொதிகள் விநியோகம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றுள்ள குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும் “அற்றார் அழிபசி தீர்த்தல்” என்ற திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. “பகிர்ந்துண்டு வாழ்வோம்” என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் இத்திட்டம் புதன்கிழமை (17.01.2024) சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் உரும்பிராயில் இடம்பெற்றுள்ளது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. இதற்கான நிதி அனுசரணையை அமரர் பொ. குமாரசாமி நினைவாக அவரது குடும்பத்தினர் வழங்கி வைத்துள்ளனர்.



கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட தொழில்வாய்ப்பு இழப்புகளைத் தொடர்ந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்ற மக்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கொரோனாப் பேரிடரின்போது ஆரம்பித்த “அற்றார் அழிபசி தீர்த்தல்” திட்டத்தைக் கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

**(கனகராசா சரவணன்)**

பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினை மற்றும் ஏனைய கொடுப்பனவு முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தைக் கோரி கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் இன்று மட்டக்களப்பில் நடைபெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்பாட்டில் நாட்டில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அமைவாக, மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலைய முன்றலில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

2016ம் ஆண்டைய அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப பல்கலைக்கழக ஊழியர்களுக்கு தருவதாக அரசினால் வாக்குறுதியளிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பை வழங்குதல், மாதாந்த இடர் கொடுப்பனவை அதிகரித்தல், 2024 பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டு ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் அக்கொடுப்பனவு பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்க கோரல், அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கேற்ப ஊதிய அதிகரிப்புச் செய்ய வலியுறுத்தல், பல்கலைக்கழகங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்பி நிருவாக விடயங்களை சுமுகமாக முன்னெடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளல், திறந்த விளம்பரத்தின் மூலம் ஆட்சேர்ப்பு நடவடிக்கையினை உடனடியாக செயற்படுத்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக நிருவாக உத்தியோகத்தர்கள் சங்கம் என்பன இணைந்து முன்னெடுத்த இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் நடைபெற்றது.

பல்வேறு வாசகங்களை தாங்கிய பதாதைகளை ஏந்தி சுமார் ஒரு மணிநேரம் இது முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

## Toronto's RE/MAX ACE Realty Inc. Hosted it's Annual Award Gala

# ரொறன்ரோவில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவனமான RE/MAX ACE Realty Inc. நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழா






A well know Real Estate Brokerage in GTA, RE/MAX ACE Realty Inc. hosted it's Annul Award Gala on 12-01-2024 at Scarborough Convention Centre. The Partners of this Brokerage M/S. Sri Nadarajasundram, Vaheesan Jeyaveerasingam, Selvan Kasipillai, Suresh Paramalingam, Rathees Paramalingam and Vijay Selvanayagam, with the support of the staff and Agents presented the colourful event on last Friday. More than hundreds Agents were awarded, according to the sales achievements.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் நன்கு அறியப்பெற்ற வீடு விற்பனை முகவர் நிறுவனமான RE/MAX ACE Realty Inc கடந்த வெள்ளிக்கிழமையான 12-01-2024 அன்று நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் விருதுகள் வழங்கும் விழா Scarborough Convention Centre மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிறுவனத்தின் பங்காளர்களான திருவாளர்கள் Sri Nadarajasundram, Vaheesan Jeyaveerasingam, Selvan Kasipillai, Suresh Paramalingam, Rathees Paramalingam and Vijay Selvanayagam ஆகியோர் தமது அலுவலக உத்தியோகத்தர்கள், மற்றும் விற்பனை முகவர்கள் சகிதம் சிறப்பான முறையில் விருதுகள் வழங்கும் விழாவை நடத்தினர்.

நூற்றுக்கணக்கான விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனையின் அளவிற்கு ஏற்ப சிறப்பான விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கலைநிகழ்ச்சிகள் மற்றும் சிறப்புரைகள் மற்றும் வாழ்த்துரைகள் ஆகியன இடம் பெற்றன.

**(நன்றி: படங்கள் - செய்தி.கொம். குணா)**























# ஒன்றியோ மாகாண அரசின் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்" வளாகத்தில் எம்பிபியும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் ஏற்பாடு செய்த "தமிழ் மரபுத் திங்கள்" விழா





கடந்த 12-01-2024 அன்று கனடாவின் ஒன்றியோ மாகாண அரசின் பாராளுமன்றமான “குயின்ஸ்பார்க்” வளாகத்தில் எம்பிபியும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் ஏற்பாடு செய்த “தமிழ் மரபுத் திங்கள்” விழா சிறப்பான நடைபெற்றது.

இந்த விழாவில் அழைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான விருந்தினர்களுடன் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். எம்பிபியும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் அவர்களின் அழைப்பின்பேரில் மாகாண அமைச்சர் ரேமண்ட் சோ. எம்பிபி அரிஸ் பாபிகியன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். தமிழர் சமூகத்தின் சார்பில் கலைஞர்கள். அமைப்புக்களின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர்கள் செய்தியாளர்கள் ஆகியோரும் அழைக்கப்பெற்றனர்.







**எனது பெருமதிப்பிற்குரிய கனடா உதயன் மற்றும் நண்பன் ஊடகங்களின் செய்தியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோருக்கு**

இத்துடன் நான் இணைத்துள்ள செய்தியானது யாழ்ப்பாணத்திலிருந்து எமது செய்தியாளர் கஜிந்தன் அனுப்பிவைத்துள்ளது என்பதை தங்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

எமது கனடா உதயன் மற்றும் நண்பன் ஊடகங்களிற்கு எனது மேற்பார்வையில் தமிழ்நாட்டில் நான்கு செய்தியாளர்களும் இலங்கையில் மூன்று செய்தியாளர்களும் பணியாற்றுகின்றார்கள்.

கடந்த வாரம் சென்னை மாநகரில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் "அயலகத் தமிழர்கள் மாநாட்டில் உலகெங்குமிருந்து பல அன்பர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டார்கள். ஏராளமான செய்திகள் அந்த மாநாட்டைப் பற்றி எழுதலாம். எமது தமிழ்நாடு மற்றும் இலங்கைச் செய்தியாளர்களுக்கு அந்த பொறுப்புண்டு. ஆனால் அது இடம்பெறவில்லை. இந்தச் செய்தியோடு தொடர்பான எமது கனடா மாகாணசபை சட்ட மன்ற உறுப்பினர் லோகன் கணபதி என்னோடு பல தளங்களில் நின்று பணியாற்றுகின்றவர். எமது பத்திரிகையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஆனால் எமது தமிழ் நாட்டு செய்தியாளர்கள் சற்றும் முயன்று பார்க்கவில்லை. ஆனால். தொடர்ந்து பல காரணங்களைச் சொல்லிக்கொள்வார்கள். இது நிச்சயம் நடக்கும்

ஆக, ஓரே ஒரு யாழ்ப்பாணத்துச் செய்தியாளர் கஜிந்தன் மாத்திரம் இந்த பெறுமதியான செய்தியை அனுப்பியிருந்தார். அவருக்கு எங்கிருந்து இந்தச் செய்தி கிட்டியது என்பது எனக்கு அறிவிக்கப்படவில்லை.

ஆனால் மிக முக்கியமான செய்தியொன்று எமது ஆசிரிய பீடத்திற்கு வந்தது என்பதே மகிழ்ச்சி. அதற்கான கஜிந்தன் அவர்களுக்கு எனது நன்றி.

மேலும் எமது பெருமதிப்பிற்குரிய கனடா உதயன் மற்றும் நண்பன் ஊடகங்களின் செய்தியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோர். இது விடயமாக தம்மை சுய விமர்சனம் செய்து கொள்ளலாம். இனி-வரும் நாட்கள் அனைவருக்கும் மிகுந்த சிரமங்கள் நிறைந்தவையாக இருக்கும் என்றே நான் கருதுகின்றேன்.

இங்ஙனம்,

அன்புடன்
ஆர். என். லோகேந்திரலிங்கம்

# ஈழ இனவழிப்புக்கான நீதி உலகத் தமிழர்களின் தன்மானத்தில் தங்கியுள்ளது

## ஒன்றாறியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி முதல்வர் ஸ்டாலின் அமர்ந்திருந்த மேடையில் தெரிவிப்பு



**பு.கஜிந்தன்**

ஈழ இனவழிப்புக்கான நீதியை வென்றெடுப்பதில் உலகத் தமிழர்களின் தன்மானமும், பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும் என்ற வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முதன்மையான பங்களிப்பை வழங்க வேண்டும் என கனடா நாட்டின் ஒன்றாரியோ மாநில சட்டமன்ற உறுப்பினர் லோகன் கணபதி தெரிவித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் இந்திய தமிழ்நாட்டில இடம் பெற்ற அயல் உறவு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரின் தொன்மையைக் கீழடியும், கந்தரோடையும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. 2500 ஆண்டுகளுக்கு முன்பே நகர நாகரிகம் கண்டு, எழுத்தறிவு பெற்ற மக்கள் கூட்டத்தின் வழிவந்தவர்கள்.

தமிழர்கள் கொத்துக் கொத்தாக கேட்பார் யாருமின்றி படுகொலை செய்யப்பட்டதன் குறியீடாக "முள்ளிவாய்க்கால்" என்ற இடம் அமைந்துள்ளது.

உலகம் எங்கும் 700 கோடிபேர் தமிழர்கள் வாழந்தாலும் இத் தாய் தமிழ்நாட்டில் தான் 2009 இல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை தடுக்க வேண்டும் என்று 18 பேர் தீக்குளித்து தம்மை ஆகுதி ஆக்கினார்கள்.

அந்த நினைவுகள் நெஞ்சில் மிகுந்த கனத்த இதயத்துடன் சுமந்துகொண்டு தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் உலக எங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில் எனது அன்பை நன்றியையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

நான் கனடா நாட்டு ஒண்டாரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக உங்கள் முன் இங்கே நின்று கொண்டிருந்தாலும் நான் பிறந்து வளர்ந்தது மேற்சொன்ன கந்தரோடையும், முள்ளிவாய்க்காலும் அமைந்திருக்கும் ஈழ தேசம் தான்.

எனது பூர்வீகம் என்று கம்பீரமாக செல்வதில பெருமை கொள்கின்றேன்.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட, அரைநூற்றாண்டுக்கும் மேலாக சபிக்கப்பட்டவர்களாக வாழ்ந்துவரும் இலட்சகணக்கான தமிழர்களில் நானும் ஒருவன்.

இன்றும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர் தேசத்திற்காகவும் தம் குரலை அணைவிடாமல் வைத்திருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் 80 களில் மாணவத் தலைவர்களில் ஒருவராக நானும் இருந்து சிறீலங்கா அனசின் இனவழிப்பினால் நாட்டை விட்டு உலகம் முழுவதும் சிதறி ஓடிய இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களில் நானும் ஒருவன்.

புலம்பெயர்ந்து கனடா தேசத்தில் தஞ்சமடைந்தேன் இன்று உங்கள் முன்னால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நிற்கும் நிலைக்கு கனடா எனக்காக அனைத்து உரிமைகளையும் அங்கீகரித்துள்ளது.

இது என்னொருவனின் கதையல்ல, என்னைப் போல் பல இலட்சக்கணக்கில் அகதிகளாக உலக நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்களின் கதையாகும். இந்த மண்ணிலும் நம் சகோதர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

அவர்கள் குடியுரிமை கேட்டு தலைமுறை தலைமுறையாக காத்திருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடும் போது ஒருவகையில் நான் ஆசிர்வதிக்கப்பட்டவன்.

கனடாவின் குடிமகனாகவும் மக்கள் பிரதிநிதியாகவும் உங்கள் முன் நிற்கிறேன்.

அகதி ஒருவர் மக்கள் பிரதிநிதியாக அமைச்சராக ஆக முடியும் என்ற அதியுன்னத செயற்பாட்டை முன்னெடுத்த உலகில் முதன்மையான சனநயாக நாடாக நீதியின் முகமாக உள்ள கனடா தேசத்தில் என் குரலை வெளிப்படுத்தி வருகிறேன்.



உலக வரலாற்றில் முதல் தடவையாக என்னைப் போன்ற கனடா வாழ் மக்கள் அனைவரதும முயற்சியோடு தமிழ் மரபுத் திங்கள் கனடா தேசத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை உலகத் தமிழர்களுக்கு கிடைத்துள்ள வரலாற்று மிக்க அங்கீகாரமும் சாதனையுமாகும்.

அத்துடன் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை கனடா ஏற்றுக்கொண்டமைக்கு முன்னோடியாக தமிழ்நாடு சட்டமன்ற தீர்மானத்திற்கு தமிழக மக்கள் கொடுத்த பேராதரவுக்கும் நமது தோழமை கலந்த நன்றி உணர்வை இந்தச் சிறப்பு நாளில் வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், தொழில், வணிகம், கலை, இலக்கிய, இசை என தமிழர்கள் கோலோச்சாத துறைகளே இல்லை உலகின் நான்கு திசைகளிலும் தமிழர்கள் மலையென சாதனைகளைக் குவித்து வருகின்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தியாவிற்குள்ளும் சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராக சமூக நீதியைக் கடைப்பிடித்து ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது. தமிழ்நாடு அரசு சமூக நீதி அரசு என்று புகழாரம் சூட்டும் அளவுக்கு வளர்ச்சிப் பரவலாக்கத்திற்கு உழைத்து வருகிறது.

இந்த சாதனைகளையும், வெற்றிகளையும் தாண்டி 21 ஆம் நூற்றாண்டில் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் கூட்டமாகவும் நம் இனம் இருந்து வருகிறது.

இது நமது தொன்மைக்கும் பண்பாட்டுச் செழுமைக்கும், நாகரிகத்திற்கும், 100 மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழர்களினத்திற்கும் விடப்பட்டிருக்கும் சவால் ஆகும்.

உலக அரங்கிலே இனவழிப்புக்கு உள்ளானது மட்டுமின்றி அதற்கான நீதியை இன்னும் வென்றெடுக்காதவர்களாகவும் நாம் இருந்து வருகிறோம்.

ஆனால், நாம் நீதியின் பால் மிகுந்த பற்று கொண்ட ஓர் இனம். சிலப்பதிகார நாயகி கண்ணகியை தெய்வமாக வழிபடும் இனம். நீதியின் குறியீடாக அவள் சென்னை மெரினாவில் கண்கள் சிவக்க நின்று கொண்டிருக்கிறாள்.

அந்த கண்ணகித் தாயின் வழிவந்த நாம், நம்மினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட படுகொலைகளுக்கு நீதியைப் பெறத் தவறுவோமாயின் இந்தப் இந்த உலகில் வாழும் பிற சமூகத்தினர் தமிழர்களின் ஆளுமை பற்றி கேள்வி எழுப்புவார்கள்.

நான் பிறந்த மண்ணின் இன்றைய நிலையை சொல்லில் விவரிக்க முடியாது. தமிழினத்தின் பண்பாட்டு பெருமிதத்தோடு இந்த மாநாடு நடந்துக் கொண்டிருக்கும் இதே சமநேரத்தில் எமது தமிழர் தாயகத்தில் பண்பாட்டு படுகொலைகள் சத்தமின்றி அரங்கேறிவருகிறது.

இதற்கு அண்மைய சாட்சியாக முல்லைதீவு மாவட்ட நீதிபதி சரவணராசா அவர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அவர் குடும்பத்தோடு தலைமறைவாகும் சூழல் உருவாகி இருக்கிறது.

தமிழ் நீதிபதிக்கு கூட அங்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எமது தாய்நாடு இரையாகிக் கொண்டிருக்கிறது.

தமிழன் சறுக்கி விழுந்தாலும் ஒன்றுபட்ட உணர்வுடன் பீனிக்ஸ் பறவை போல் எழுந்தான் என்ற வரலாற்றை நாம் படைக்க வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற தமிழ்நாட்டுப் புலவன் கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப உலகமெங்கும் சிதறி வாழ்கின்ற நாம் ஒரு நாடற்றவர்களாகி இனமழிந்து போகின்ற நிலைக்கு ஆளாவிடக்கூடாது.

அதற்கு எம் தாய் தமிழ்நாடு துணை நிற்க வேண்டுமென எமது தாய் நிலத்திலே கண்ணீரோடு காத்திருக்கும் எமது உறவுகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வருகிறேன். தமிழனுக்கு எங்கு அநீதி இழைத்தாலும் அவன் திரும்பிப் பார்க்கும் இடம் தமிழ்நாடு தான்.

இந்த மண் தமிழினத்திற்காக பன்னாட்டரங்கில் குரல் கொடுப்பதில் தான் உலகெங்கும் பரவிவாழும் தமிழர்களின் மாண்பும் பாதுகாப்பும் இருக்கிறது.

இனவழிப்புக்கு உள்ளான தமிழினம் நீதியை வென்றெடுப் பதில்தான் உலகத் தமிழர்களின் தன்மானமும் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும். அந்த வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முதன்மையான பங்களிப்பை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## அந்தநாள் ஞாபகம் வந்ததே நெஞ்சிலே

*அந்நாள் ஞாபகம் அசைத்துப் பார்க்கையில்*
*அருமை நினைவுகள் திரும்புதே!*
*இந்நாள் அவற்றை எண்ணிப் பார்க்கையில்*
*இனிமை எண்ணம் எட்டுதே!*
*சொந்தமாய்ச் சைக்கிள் வாங்கிச் சுற்றியே!*
*சந்தியில் வம்பும் அளந்தோம்*
*கந்தன் கோவிற் கார்த்திகைத் திருவிழாவில்*
*கடலையாற் கடலை போட்டோமே!*

*கிட்டிப்புள் அடித்துக் கிளிக்கோடும் மறித்து*
*கீரிமலை களவாய்ச் சென்றோம்*
*பட்ட பனையில் பனக்கிளி பிடித்து*
*பனம்பழம் சுட்டுத் தின்றோம்*
*சுட்டு எடுத்த சுவைமிகு கிழங்கை*
*சம்பல் சேர்த்துப் புசித்தோம்*
*கட்டுவன் வயிரவர் கோவிற் திருவிழாவில்*
*கண்ணன் கோஸ்டியும் பார்த்தோமே!*

*நல்லூர் மஞ்சம் நாமும் பார்த்தே!*
*நள்ளிராச் சினிமா பார்த்தோம்*
*வெல்லம் சேர்த்த மோதகம் தேநீரும்*
*வீமன் கடையிலே குடித்தோம்*
*செல்வம் வீட்டுச் செவ்விள நீரையும்*
*சத்தமின்றிப் பிடுங்கிக் குடித்தோம்*
*கொல்லங் கலட்டி மணியம் கடையில்*
*கோதுமை றொட்டியும் சுவைத்தோமே!*

*சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பாய்க் கொண்டாடி*
*சிறந்த போட்டிகள் நடாத்தினோம்*
*புத்துடை அணிந்து பொலிவு பெற்றே!*
*மத்தாப்புக் கொளுத்தி மகிழ்ச்சி பெற்றே!*
*முறைமாறித் தேங்காய் அடித்தோம்*
*சத்தாய்ச் செய்த சர்க்கரைப் பொங்கலை*
*சிறப்பாய்ச் சுவைத்து மகிழ்ந்தோமே!*

*சின்னச் சிவனார் சிவராத் திரியில்*
*சினிமா பார்க்கச் சென்றோம்*
*சின்னவன் மருகன் சீவிய் கள்ளை*
*சிரட்டையில் ஊற்றிக் குடித்தோம்*
*சின்னான் வீட்டுச் சிவப்புச் சேவலை*
*சத்தம் செய்திடாப் பிடித்தே!*
*அன்னம் வீட்டு அடுப்படி அடுப்பில்*
*அருமையாய்ச் சமைத்து உண்டோமே!*

*திருமகள் கடையில் திறிறோஸஸ் வாங்கி*
*திருட்டுத் தம்மும் அடித்தோம்*
*திருவெம் பாவைப் பஜனையில் சேர்ந்தே*
*திருப்பள்ளி எழுச்சியும் இசைத்தோம்*
*மருதடித் தேரிலும் மகிழ்வுடன் கலந்தே!*
*மனதில் மகிழ்ச்சி கொண்டோம்*
*அருமையாய்க் கிடைத்த அன்னதான அடிசிலை*
*ஆசையாய் மகிழ்ந்து உண்டோமே!*

*மாவிட்ட புரவிழா மகத்தான காலமாம்*
*மாம்பழத் திருவிழா மறக்காது*
*வேவி வாத்தியார் விழாங்கனி பொறுக்கியே*
*விரும்பிச் சுவைத்து உண்டோம்*
*சேவியர் மாமா சின்னக் குடிசையில்*
*சீட்டும் விளையாடிக் களித்தோம்*
*ஆவி பறக்கும் தேநீரை அருந்தியே!*
*அருமையாய்ப் பொழுதைப் போக்கினோமே!*

*என்னதான் வசதிகள் இங்கே இருந்தும்*
*எண்ணம் என்னவோ அங்குதான்*
*பொன்னான வாழ்வின் பொற்காலம் நினைத்தால்*
*புதிதாய்ப் புழுகம் பூக்குதே!*
*மின்னலைப் போலவே மின்னியே மறைந்தினும்*
*மறந்திடாக் காலமே அதுதான்*
*சென்ற நாட்களைச் சிறிது சிந்தித்து*
*சிறியதோர் புன்னகை புரிந்தேனே!.*

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
***(416) 844-7453***

கனடிய செய்திகள் Canadian News

Deputy Mayor and Councillor Jennifer McKelvie's "Scarborough Tamil Heritage Month Celebrations"

## ரொறன்ரோ மாநகர துணை மேயர் மற்றும் உறுப்பினர் Jennifer McKelvie வழங்கும் தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம்

ரொறன்ரோ மாநகர துணை மேயர் மற்றும் உறுப்பினர் Jennifer McKelvie வழங்கும் தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்டம் எதிர்வருலம் 20-01-2024 சனிக்கிழமை மாலை 3.30 தொடக்கம் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.




## கனடா வோட்டர்லூ பிராந்தியத்தில் உதயமாகும் முருகன் இந்து கோவில்

கனடா - வோட்டர்லூ பிராந்தியத்தில் 80களில் குடியேறிய இலங்கை, இந்திய தமிழ்ப் பூர்வீக மக்களின் சிந்தனையின் ஒரு பகுதியாக இந்துக் கோயிலை இப்பகுதியில் நிறுவுவதை நோக்கமாக் கொண்டிருந்தது. இப்போது இலாப நோக்கற்ற அமைப்பாகப் பதிவுசெய்யப்பட்ட கோயில், முருகன், விநாயகர், சிவன், துர்க்கை, வெங்கடேஸ்வரா போன்ற தெய்வங்களை உள்ளடங்க முருகன் கோவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

கோவில் திட்டத்தில் அர்ப்பணிப்புள்ள குழு கடந்த எட்டு மாதங்களாக விடாமுயற்சியுடன் செயல்பட்டு வருகிறது. கோயில் நிர்வாகக் குழு, தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் நலம் விரும்பிகளின் ஒருங்கிணைப்புடன் நிதி திரட்டும் முயற்சி முக்கியமான ஒரு நீண்ட காலத் திட்டமாக கருதுகின்றார்கள். சமூகத்தின் உற்சாகத்தையும் ஆதரவையும் பிரதிபலிக்கும் வகையில் ஆதரவுகள் ஏற்கனவே குவியத் தொடங்கியுள்ளன.

இலங்கைத் தமிழர்கள் தென்னிந்திய தமிழர்கள், மலையாளம், கன்னடம் மற்றும் தெலுங்கு மொழி பேசும் சமூகத்தினருக்கு இக்கோயில் சேவை செய்யும் ஒரு பெரிய வரப்பிரசாதமாக அமையவுள்ளது. ஒன்றுபட்ட குடும்பத்தை உருவாக்குவது, மதப் பழக்கவழக்கங்கள் மற்றும் வளமான பாரம்பரிய கலாச்சாரத்தின் கொண்டாட்டங்களுக்கான புகலிடமாக உருவாக்குவதே இந்த நோக்கம்.

இலங்கையின் யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில்களில் ஈடுபட்டுள்ள பெறுமதியான அனுபவமும் அறிவும் இத்திட்டத்தை முன்னெடுக்க உதவியாக உள்ளது. ஒரு இடத்தை வாடகைக்கு எடுப்பதற்கும், சிலைகளை வாங்குவதற்கும் நிதியைப் பெறுவதே உடனடி இலக்காகும், அடுத்த ஆண்டு ஒரு இடத்தை வாடகைக்கு எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கோவில் திட்டத்தின் தொடக்க விழா எதிர்வரும் தைப்பூச தினமான ஜனவரி 26, 2024 வெள்ளிக்கிழமை அன்று கிச்சனரில் உள்ள Doon Pioneer Community Center ல் மங்களகரமான தை பூசத் திருவிழா அன்று ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பாஞ்சாட்சர விஜயகுமார் அவர்களின் தலைமையில் மாபெரும் பூஜை விழாவுடன் இடம்பெறவுள்ளது.

தொடக்க விழாவைத் தொடர்ந்து கலாச்சார நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள், பங்கேற்பாளர்களுக்கு கலாச்சார அனுபவத்தை மேலும் மேம்படுத்தும். ஒரு அன்னதானம், அல்லது சமூக விருந்து, நிகழ்வை நிறைவு செய்யும், கொண்டாட்டத்திலும் ஒற்றுமையிலும் மக்களை ஒன்றிணைக்கும். பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இது வரப்பிரசாதமாக அமையவுள்ளது.

வோட்டர்லூ பிராந்தியத்தில் உள்ள இலங்கை தமிழ் சமூகங்கள் மற்றும் தென்னிந்திய சமூகத்தினர் இந்த முருகன் ஆலயத்தின் சமூகம், கலாச்சாரம் மற்றும் இந்த கோவில் திட்டம் என்பன ஒரு சான்றாக அமையும்.




## கடந்தவையும் கடப்பவையும் - (85)

இத்துயர் நடக்குமுன் நித்தமும் அங்கு
எத்தனை போராட்டம் உயிர் காக்க

இப்போ இதைச் சொன்னால் சலிப்பாகும்
எப்போதோ நடந்ததை, எல்லோரும் அறிந்ததை

எத்தனை தரம்தான் சொல்லுவாய் என்று - இங்கும்
அத்தனை பேரும் நினைக்கக்கூடும் - ஆனால்

களம்வேறு காலம்வேறு அங்கும் இங்கும்
கலங்கித்திரிந்த மக்களும் வேறு

தொண்டமான் ஆற்றிற்கு அக்கரையில் இராணுவம்
கந்தனின்சந்நிதி உள்ளிட்ட இக்கரையில் புலிகள்

அக்கரையில் இருந்து இக்கரைக்கு வருவது
அத்தனை சுலபமாக இருக்கவில்லை

எத்தனை நாள் ஆனது ஆகாயக் கருடர்களின்
மெத்தப் பெரும் உதவியோடும் முன்னேற,

எத்தனை விதமான குண்டுகள் வந்தன
சத்தமின்றி வந்தபின்பும் வெடித்தன

கடலில் இருந்து வந்தவையும் - ஊரிக்காட்டு
நிலையில் இருந்து வந்தவையும் - ஆகாயத்தில்

விசிறிக்கொண்டு வந்தவையும் எத்தனை எத்தனை - அதனால்
சிதறியும் பதறியும் வந்த மக்கள்

வைகறையிலும் வழிநெடுக இருந்தனர் தவழ்ந்தனர்
கைகளில் கிடைத்ததை எடுத்தவராய்

தலையிலே மூட்டை முடிச்சுக்களும் - தங்கள்
இடைகளில் பிள்ளைகளுமாய் சிலர்

பள்ளிப்பருவப் பிள்ளைகளும் இளைஞர்களும் யுவதிகளும்
செய்வதறியாது பெரியவர் பின் அள்ளுப்பட்டே சென்றனர்

நிலையாகக் கால் ஊன்ற முடியாத நிலையிலும் - தக்கார்
துணையொடு நடந்த தாத்தாக்களும் பாட்டிகளும்

சிலசமயம் மக்களோடு கூடவே ஆடுமாடுகளும்
திகிலடைந்து ஓடிவந்த காலம் அது

அன்றைய நாட்களில் கந்தனின் சந்நிதியில் - பல
இன்னல்கள் நடக்கவே கந்தனையும் நொந்தனர் மக்கள்

'முன்னைய அதிசயத்தில் கொஞ்சமேனும் காட்டவில்லை' என்று - ஆனாலும்
'அன்னதானக் கந்தனுக்கு ஆடம்பரம் பிடிக்காது' என்றும்கூட சொன்னவர்கள் இருந்தனர்

பென்னம்பெரு வீடுகள் இயங்கு தொழிற்சாலைகள் என
முன்னைய காலங்களில் கலகலப்பாய் இருந்த இடம்

சின்னாபின்னமாகி பற்றைகளும் பறுகுகளும் - பெரும்
மண்மூட்டைகளும், முட்கம்பிகளும், பாதுங்குகுழிகளும்

சப்பாத்துக் கால்களும் சட்டித்தொப்பிகளுமென மாற - கந்தனை
எட்டிப்பார்க்க இயலாத காலமொன்று உருவாச்சு - பின்

காலங்கள் மாற அன்னதானக் கந்தனின் கோலமும்
இயல்பாக மாறி இன்றைய நிலைக்கு ஆகியது - இன்று

சாலைகளில் எத்தனை திருமணமண்டபங்கள் - ஆனாலும்
வேலவனின் ஆசிக்காய் தாலிகளில் பெயர்கட்டி

தெற்கு வாசற்கதவடியில் இன்னும் எத்தனை தட்டுக்கள்!

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers





30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...


Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1083

## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

விநாயகப்பெருமானின் சிறப்பு. புகழ், அருள், பகைவர்களை வென்று மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டமை போன்ற பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியதாக விநாயகர் தொடர்பான புராணக் கதைகள் காணப்படுகின்றன. புராணக் கதைகள் வெறும் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டவை என்ற கருத்து தவறானது. புராணம் என்றால் புராதனம், பழமை என்ற கருத்தினை விளக்கும். இவ்வாறான புராணக் கதைகளும் பல்வேறு தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

இந்துசமயத்திலே காணப்படுகின்ற ஒவ்வொரு தெய்வத்திற்கும் அத்தெய்வங்களோடு தொடர்புடைய புராணக் கதைகள் பல காணப்படுகின்றன. இவற்றிலே காணப்படுகின்ற கதைகளின் சாரங்களுக்கோ அல்லது சில காட்சிகளுக்கோ வடிவம் கொடுத்து அவற்றைச் சுவரோவியங்களாக ஆலயங்களிலே தீட்டி பக்தர்கள் புரியும் வகையில் அவற்றைத் தெரியப்படுத்தும் பணியைப் பல ஆலயங்கள் செய்துள்ளன. இவ்வாறான பல சுவரோவியங்கள், திருகே-ாணமலை ஆலடி விநாயகர் ஆலயத்திலும் காணப்படுகின்றன.

நல்லவர்கள் எங்கிருக்கின்றார்கள் எனத் தேடிக் கண்டுபிடித்துத் தீங்குசெய்த கஜமுகாசுரனைத் தண்டித்து, பின் மன்னித்து நன்மைசெய்யும் பேரருள் வாய்ந்தவர் விநாயகர் என கந்தர் அனுபூதியில் அருணகிரிநாத சுவாமிகள் அருளியுள்ளார். இக்கதையினை அடிப்படையாகக் கொண்ட கஜமுகன் போரினை விளக்கும் சுவரோவியமும் ஆலடிவிநாயகர் ஆலயத்திலே காணப்படுகின்றது. அத்தோடு விநாயகப்பெருமானோடு தொடர்புடைய விநாயகசஷ்டி விரதம், அனந்தன் சாபநீக்கம் பற்றிய சுவரோவியங்களும் குறிப்பிடத்தக்க அழகிய சுவரோவியங்களாக விளங்குகின்றன.

இவ்வாலயத்திலே காணப்படும் திருவாசி மிக அழகுடையதாகவும் பெரியதாகவும் காணப்படுகின்றது. இத்திருவாசி பன்னிரண்டடி உயரமும், பத்தடி அகலமும் கொண்டது. இத்திருவாசி மகாமண்டபவாசலை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது. வடகிழக்குத் திசையில் பைரவரும், நாகதம்பிரானும், பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். அத்தோடு அழகியகோபுரத்தைக் கொண்டதாகவும் இக்கோவில் காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்திலேயே முதன்முதல் இவ்வாலயத்திலேதான் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இத்திருவுருவம் 1980 ஆம் ஆண்டு ஆவணி-மாதம் 21 ஆம் நாள் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பாகக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இத்திருவுருவம் மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. இத்திருவுருவத்தின் பஞ்சமுகங்களும் பல்வேறு தத்துவங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஈசானத்திருமுகத்தை மத்தியில் மேல்நோக்கிய பாவனையில் வைத்து தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய நான்கு திருமுகங்களையும் நான்கு திக்கையும் நோக்கியிருக்கும்விதத்தில் இந்தப் பஞ்சமுக விநாயகர் அமைக்கப்பட்டுள்ளார். இத்திருவுருவத்திற்கு விநாயக விரதகாலத்திலே இருபத்தியொருநாளும் பஞ்சமுகார்சனை நடைபெறும்.

இவ்வாலயத்திலே திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை ஆகிய நான்குகாலப்பூசைகளும் சிறப்பாக நடைபெறும். இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவமும் சிறப்பாக நடைபெறும். சித்திரா பூரணையைத் தீர்த்த தினமாகக் கொண்டு பத்துநாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். அத்தோடு மாதசதுர்த்தி, விநாயகவிரதம், கஜமுகசூரசம்மாரம், சர்வாலயதீபம், திருவெம்பாவை, சுவர்க்கவாசல் ஏகாதசி, தைப்பூசம், முதலியவற்றோடு நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். மார்கழிமாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகமும் இங்கு மிகச் சிறப்பாக நடைபெறும். சித்திராபூரணை தினத்தன்று திருகோணமலை ஆலடி விநாயகப் பெருமான் கடற்தீர்த்தம் ஆடச் செல்வார். இத்திருநாளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கடற்தீர்த்தமாடி விரதம் அனுட்டிப்பது வழக்கம்.

கணபதிபூசை கைமேற் பலன் என்று கூறுவாரகள். விநாயகர் வழிபாட்டை யாவரும் எளிதாகக் கடைப்பிடிக்கமுடியும். இருகைகளாலும் தலையிலே குட்டிக் கும்பிடுதலும், இருகைகளாலும் மாற்றி இருகாதுகளையும் பிடித்தக்கொண்டு தோப்புக்கரணம் இட்டு வணங்குதலும் விநாயகர் முன் செய்யப்படும் சிறப்பு வழிபாடுகளாகத் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்படுகின்றன. திருகோணமலைப்பிரதேசத்திலே பல விநாயகர் ஆலயங்கள் காணப்பட்டபோதிலும் எண்ணியபொருளெலாம் எழிதில் பெறவைக்கும் விநாயகராக எழுந்தருளியிருந்து, அடியார்களுக்கு வேண்டியதை ஈந்து அருள்பாலிக்கும் தெய்வமாக திருகோணமலை ஆலடி விநாயகர் விளங்குகின்றார்.

*" அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன*
*அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன*
*அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே*
*அஞ்சதி யாதி அகம்புக லாமே "*

**- வளரும்**



OM NAMO NARAYANA



**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM**
**L3S 3T8 CANADA**
**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

## 19-01-2024 வெள்ளி தொடக்கம் 25-01-2024 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)


தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**மேஷம்:** விசேஷமான பலன் கிடைக்கும் வாரம். நாடிய பொருள் கிடைக்கும். முன் கோபத்தை தவிர்க்க வேண்டும். சுபக்காரியம் தடைப்படும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டாகும். உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். கூட்டுத் தொழிலில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். தொழில் போட்டி மறையும். எதிர்பாராத நன்மை கிட்டும். கல்விச் சலுகைகள் கிடைக்கும். காதலும், நட்பும் மலரும் காலம். வெளியூர் பயணம் லாபம் தரும். தந்தை உடல் நிலையில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். அணிமணிகள் சேரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். விருந்தினர் வருகை உண்டு. பொருளாதார வளம் மேம்படும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். விருந்தினர் வருகை உண்டு. விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். வரவுகள் மிகுதியாகும். விவேகமான செயல்பாடுகள் அவசியம். சொந்த வீடு வாங்க முயற்சி செய்யலாம். திருமண முயற்சி வெற்றியை தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,3,5,9
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q





**ரிஷபம்:** தொழில் முன்னேற்றம் கிடைக்கும் வாரம். இதமான நிகழ்வுகள் இஷ்டம் போல் நடந்தேறும் காலம். நல்ல மனிதர்களின் நட்பு பெருகும். நலிவுற்ற தொழில் பொலிவு பெறும். புதிய ஆடைகள் சேரும். அலுவலகப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். விரக்திகள் குறைந்து திருப்தி பெருகும். வாகனச் செலவுகள் ஏற்படும். ஆடம்பர சுகங்கள் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். உணவுப் பிரியம் அதிகரிக்கும். மாலை நேரத்தில் மங்களச்செய்தி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் தொல்லைத் தரும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். தொழிலில் முன்னேற்றம் தரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவிகள் கிட்டும். வயிற்று உபாதை தோன்றி மறையும். கடல் போல் லாபம் சேரும் காலம். பணநடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மனக்கசப்பு நீங்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். சகோதரியினால் நன்மை உண்டு. குடும்ப மனநிறைவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. முத்தான வாய்ப்புக்கள் பெருகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். கற்ற வித்தையால் கௌரவம் சேரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. முன்னேற்றம் காணும் முக்கியமான நாளாக அமையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீநித்ய கல்யாணப் பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 6,4,3,9 அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,V




**மிதுனம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவுவிடுதி லாபம் தரும். உழைப்பிற்கான பலனை பெறுவீர்கள். துன்பங்கள் விலகும். கலைந்த குடும்பங்கள் ஒன்று சேரும். கடன்சுமைகளில் இருந்து விடுபடுவீர். அரசியலில் புகழ் கூடும். வீண்பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லைகள் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்படும். பொருளாதார உயர்வு ஏற்படும். இனிமையான எண்ணங்கள் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். முனைந்து செயல்பட்டு முன்னேற்றம் காணக்கூடிய அற்புதமான காலம். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்கசப்பு ஏற்படும். காதலில் கவனம் தேவை. பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாகும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். அலைச்சல் குறையும். பழைய பகை மாறும். வாய்ப்புக்கள் தேடி வரும். வேலைபளு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். சோதனைகள் சாதனையாக மாறும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிட்டும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். வயிறு சம்பந்தமான நோய் விலகும். கால்நடைகளால் பலன் உண்டு. வழக்கு வெற்றித் தரும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். சுபகாரிய செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உலகளந்த பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,H




**கடகம்:** உண்மையான நன்மைகளை சந்திக்கும் வாரம். விபரீத எண்ணங்கள் விலகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். சச்சரவுகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. உறவினர்களின் வருகை உண்டு. வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்புகள் அகலும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுபகாரியச் செய்தி வரும். வேலைதிறன் கூடும். தொழில் மாற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் நல்ல செய்தி தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். மனம் மகிழும் நாளாக அமையும். உள்ளம் பூரிப்படையும். மற்றவையால் அமைதி கெடும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள். சொத்து பிரச்சனை தீர்வுக்கு வரும். பங்குச்சந்தை வியாபாரம் லாபம் தரும். வழக்கு வெற்றியைத் தரும். இஷ்டம் போல் வாழ்க்கை அமையும். தனவரவில் தாமதம் ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. வேண்டாத நட்பு விலகும். குடும்ப சச்சரவு ஏற்படும். வருமான வரி தொல்லை ஏற்படும். புத்திரர் வழியில் தொல்லையுண்டு. கடன் வாங்க நேரிடும். ஆடம்பர பொருள் சேரும். வாழ்வில் மேன்மை உண்டாகும். வீண் பேச்சைத் தவிர்க்கவும். சொந்த முயற்சியால் முன்னேற்றம் காணக்கூடிய காலம். இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். சந்தோஷம் அதிகமாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. காரியம் நிறைவேறும். வீண் பழி அகலும். மங்கள செய்தியால் மனம் மகிழும். பெண்களுக்கு ஆனந்தம் குடிக்கொள்ளும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**சிம்மம்:** அசையா சொத்துக்கள் சேரும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும். பெண்களுக்கு மங்கள செய்தி வரும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். இறை விழிப்புணர்வு கூடும். தேவையில்லா பயங்கள் நீங்கும். மனோ தைரியம் கூடும். திருமகள் கிருபைகள் உண்டு. உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைகளிடத்தில் அன்புடன் நடந்துக் கொள்வீர்கள். புதுதொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். மனதில் அளவில்லா சந்தோ'ம் உண்டாகும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். பங்குச்சந்தைத் தொழில் பணம் தரும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். உறவினரால் முன்னேற்றம் உண்டு. பொன்னான நேரங்களாக அமையும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். மங்களச்செய்தி வரும். வீண் வம்பு விலகும். சேய் நலம் கூடும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உடல்நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். ஏற்றமான தருணம் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பதவி வாய்ப்பு வரும். வீடு தேடி வெற்றி வரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. தொல்லைத் தந்தவர் விலகிடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K




**கன்னி:** அன்பும், அரவணைப்பும் கிடைக்கும் வாரம். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லைத் தந்தவர் விலகி விடுவர். பிள்ளைகளால் பெருமை சேரும். வங்கி சேமிப்பு உயரும். வயிற்று உபாதை வந்து சேரும். மாற்று இன நட்பு பெருகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களின் ஆலோசனைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். மனைவியால் மதிப்பு உயரும். தெம்பும், தைரியமும் கூடும். மங்கையருக்கு திருமண பாக்கியம் கூடும். பூமி வாங்கும் யோகம் உண்டு. கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். புத்தி சாதுர்யம் கூடும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். பணிவும், துணிவும் கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். ஆன்மீக சிந்தனை மேலோங்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். காரிய வெற்றி உண்டு. இல்லத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆபரணப் பொருள் களவு போகும். நெருப்பினால் அபாயம் உண்டு. மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். அடுத்தவர் தலையீடு குறைக்கவும். செலவுகள் அதிகமாகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். நண்பர்களால் நன்மையுண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடன் சுமை குறையும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். தனவரவு திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 5,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F




**துலாம்:** பக்குவமான பணவரவு சேரும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கௌரவ வாய்ப்பும் அதிகரிக்கும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். திடீர் செலவுகள் ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். உடல்வலி தோன்றி மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். எதிலும் கவனம் தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன்தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். சிரமங்கள் குறையும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். காரியம் கைகூடும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். பயணம் அனுகூலம் தரும். போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். புத்திரர்களால் மேன்மையுண்டு. வீடு, மனை யோகம் உண்டாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பளீர்ப் பேச்சுக்களால் திடீர் முன்னேற்றம் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வேலைபளு கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**விருச்சிகம்:** நண்பர்களால் பணவரவு கிடைக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டு மறையும். முன் கோபம் தவிர்க்கவம். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வார்கள். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். பிரச்சனைகள் முற்றிலும் அகலும். சொத்துச் சேர்க்கையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். வாயில் தேடி வரன் வரும். நட்பு வட்டம் விரிவடையும். உத்தியோகத்தில் பதவி உயர்வு வரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வராத கடன் வந்து சேரும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். இயற்கைக் காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டு. மாற்று இன உதவி கிட்டும். ஆதி முதல் அந்தம் வரை ஆதாயம் கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும். பலவிதத்தில் ஷேமம் கிடைக்கும். பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். வாகன மாற்றம் உண்டு. செயல்களில் நிதானம் தேவை. புதிய முயற்சி பலிதமாகும். வியாபாரம் சுமாராக இருக்கும்.

***(தொடர்ச்சி 22 பக்கம்)***

கனடிய செய்திகள்
Canadian News

## Ontario's Minister and MPP Hon. Raymond Cho Hosted '2024 New Year's Levee'

# ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான Hon. Raymond Cho அவர்கள் நடத்திய "புத்தாண்டை வரவேற்கும்" நிகழ்வு





ஒன்றாரியோவில் அனைத்து மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றவராகவும் நன்கு அறியப்பெற்றவராகவும் விளங்கும் ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான Hon. Raymond Cho அவர்கள் நடத்திய "புத்தாண்டை வரவேற்கும்" நிகழ்வு 18-01-2024 வியாழக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி விழாவிற்கு அழைக்கப்பெற்ற விருந்தினர்களாக ரொறன்ரோ மாநகர போக்குவரத்து ஆணைக்குழுவின் (TORONTO TRANSIT COMMISSION CHAIRMAN) தலைவர் கவுன்சிலர் ஜமால் மேயர்ஸ் மற்றும் அலுவலக அதிகாரிகள் ஆகியோர் அங்கு கூடியிருந்தனர். உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரான லோகேந்திரலிங்கம் அவர்களும் அங்கு விசேட அழைப்பின்பேரில் சமூகமளித்திருந்தார். இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அங்கு கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பான உணவளித்து மகிழ்ந்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான Hon. Raymond Cho அவர்கள்.

# கனடாவில் மறைந்த "கெப்டன்" விஜயகாந்த்" அவர்களின் மறைவிற்கு மரியாதை செலுத்தும் முகமாக நடத்தப்பெற்ற அஞ்சலி நிகழ்வு






கனடாவில் மறைந்த "கெப்டன்" விஜயகாந்த்" அவர்களின் மறைவிற்கு மரியாதை செலுத்தும் முகமாக கடந்த 13-01-2024 அன்று சனிக்கிழமை நடத்தப்பெற்ற அஞ்சலி நிகழ்வு மக்கள் மனங்களிற்கு நிறைவைத் தந்துள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் "கனடா உதயன்" ஆசிரிய பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ள "நன்றி தெரிவிக்கும்" குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

கனடா - ஸ்காபுறோ நகரில் ஆரோசை இசைக்குழு மற்றும் ஆரபி புரடக்ஷன் இணை ஏற்பாட்டில் நடைபெற்ற "கப்டன்" விஜயகாந்த் அவர்களுக்கான மரியாதை செலுத்தும் அஞ்சலி நிகழ்வு இனிதான பாடல்களோடும் மனதை நெகிழ வைக்கும் உரைகளோடும் அனைத்தும் அடங்கிய அடக்கமான விழாவாக நிறைவுற்றது. இந்த










நிகழ்வு கனடா பைரவி நுண்கலைக் கூடத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விழாவிற்கு பைரவி நுண்கலைக் கூடத்தின் அதிபரும் "ஆரோசை" இசைக்குழுவின் நிறுவனருமான திரு. ஜெயச்சந்திரன் தியாகராஜா தலைமை வகித்தார்.

அங்கு கவிஞர் சயந்தன் அவர்கள் இறுக்கமான அஞ்சலிக் கவிதை ஒன்றை வாசித்தளித்தார். அஞ்சலி உரைகளை டாக்டர் போல் ஜோசப். "உதயன்" லோகேந்திரலிங்கம் உட்பட சிலர் ஆற்றினார்கள். பிரபல தொலைக்காட்சி வானொலி அறிவிப்பாளரும் நிகழ்ச்சித் தொகுப்பாளருமான பிரசாந்த் அவர்கள் தொகுத்து வழங்கினார். அங்கு "ஆரோசை" இசைக் குழுவினரால் அஞ்சலி நிகழ்வில் சேர்க்கப்பட்ட பாடல்கள் அனைத்தும் மிகுந்த உருக்கத்தை ஏற்படுத்துபவையாக விளங்கின. அஞ்சலி நிகழ்விற்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் இறுதிவரை இருந்து "அமரர் கெப்டன்" அவர்ளுக்கு மரியாதை செலுத்தி மலர் அஞ்சலியும் செய்தனர்.

# அன்பின் தொனி – 720

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை** - Grace of God

**சாலொமோனுடைய நீதிமொழிகள்**

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் மனுஷர் பேர்த்தெழுதின சாலொமோனுடைய நீதி மொழிகள்: காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை; காரியத்தை ஆராய்வதோ ராஜாக்களுக்கு மேன்மை. வானத்தின் உயரமும், பூமியின் ஆழமும், ராஜாக்களின் இருதயங்களும் ஆராய்ந்துமுடியாது. வெள்ளியினின்று களிம்பை நீக்கிவிடு, அப்பொழுது தட்டானால் நல்ல உடைமை பிறக்கும். ராஜாவின் முன்னின்று துஷ்டரை நீக்கிவிடு, அப்பொழுது அவனுடைய சிங்காசனம் நீதியினால் நிலைநிற்கும். ராஜாவின் சமுகத்தில் மேன்மைபாராட்டாதே பெரி யோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே. வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே உன் கண்கள் கண்ட பிரபுவின் சமுகத்தில் நீ தாழ்த்தப்படுவது நல்லதல்ல் அவன் உன்னைப் பார்த்து: மேலே வா என்று சொல்வதே உனக்கு மேன்மை. முடிவிலே உன் அயலான் உன்னை வெட்கப் படுத்தும்போது, நீ என்ன செய்யலாம் என்று திகைப்பாயே. நீ உன் அயலானுடனேமாத்திரம் உன் வியாஜ்யத்தைக்குறித்து வழக்காடு, மற்றவனிடத்தில் இரகசியத்தை வெளிப்படுத் தாதே. மற்றப்படி அதைக் கேட்கிறவன் உன்னை நிந்திப்பான் உன் அவமானம் உன்னைவிட்டு நீங்காது. ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழ ங்களுக்குச் சமானம். கேட்கிற செவிக்கு, ஞானமாய்க் கடிந்துகொண்டு புத்திசொல்லுகிறவன், பொற்கடுக்கனுக்கும் அபரஞ்சிப் பூஷணத்திற்கும் சரி.

**இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்.**

கோடைகாலத்தில் உறைந்தமழையின் குளிர்ச்சி எப்படியிருக்கிறதோ, அப்படியே உண்மை யான ஸ்தானாபதியும் தன்னை அனுப்பினவனுக்கு இருப்பான் அவன் தன் எஜமான்களுடைய ஆத்துமாவைக் குளிரப்பண்ணுவான். கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி. நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம் இனிய நாவு எலும்பையும் நொறுக்கும். தேனைக் கண்டுபிடித்தாயானால் மட்டாய்ச் சாப்பிடு மிதமிஞ்சிச் சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய். உன் அயலான் சலித்து உன்னை வெறுக்காதபடிக்கு, அடிக்கடி அவன் வீட்டில் கால்வைக் காதே. பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுகிற மனுஷன் தண்டாயுதத்துக்கும் கட்கத்துக்கும் கூர்மையான அம்புக்கும் ஒப்பானவன்.. ஆபத்துக்காலத்தில் துரோகியை நம் புவது உடைந்த பல்லுக்கும் மொழி புரண்ட காலுக்கும் சமானம். மனதுக்கமுள்ளவனுக்குப் பாட்டுகளைப் பாடுகிறவன், குளிர்காலத்தில் வஸ்திரத்தைக் களைகிறவனைப்போலவும், வெடியுப்பின்மேல் வார்த்த காடியைப்போலவும் இருப்பான்.

**உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்க ஆகாரங்கொடு**

அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின்மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய் கர்த்தர் உனக்குப் பலனளிப்பார். வடகாற்று மழையையும், புறங்கூறுகிற நாவு கோபமுகத்தையும் பிறப்பிக்கும். சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப்பார்க்கிலும், வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம். தூரதேசத் திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம். துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பாகும்.தேனை மிகுதியாய் உண்பது நல்லதல்ல, தற்புகழை நாடுவதும் புகழல்ல. தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான். **- நீதிமொழிகள் 25: 1-28**

**தொடரும்...**

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** அலைச்சல் அதிகரிக்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திவ்யமான பலன் கிடைக்கும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். கலவரமான சூழ்நிலைகள் காணப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,B




**தனுசு:** மகிழ்ச்சிகள் அதிகரிக்கும் வாரம். விவசாயிகள் பலன் பெறுவார்கள். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் உண்டாகும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. சேமிப்பு உயரும். பதினாறு வகையான செல்வங்கள் சேரும். காதல் கைக்கூடும். நன்மைகள் நாடி வரும். வராதக் கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. மாற்று இனத்தவர் வாழ்த்துக் கிட்டும். கலைத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. பயணத்தால் பலன் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பெருமை சேரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனைவியால் மகிழ்ச்சி ததும்பும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். திருமண தகவல் இல்லம் தேடி வரும். இனம் புரியாத சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தொழில் வகையில் மேன்மையுண்டு. தொகை தொகையாய் சேரும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும். உணவு பிரியம் அதிகரிக்கும். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**மகரம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரும் வாரம். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். தனவரவுகள் அதிகரிக்கும். நாடிய பொருளும், தேடிய வாய்ப்பும் கிடைக்கும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். போட்டிகள் உருவாகி மறையும். வில்லங்கம் விலகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். பொருளாதார வளம் மேம்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்றங்கள் நிகழும். பணி செய்யும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். தொழில் லாபம் பெருகும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். அமைதியான மனநிலை காணப்படும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். காதலர்களிடையே கசப்பு விலகும். விளையாட்டுத்துறையில் லாபம் கிட்டும். அணிகலன் சேர்க்கையுண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சிரமங்கள் குறையும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பேச்சில் நிதானம் தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். கனவுகள் பலிதமாகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: சித்ர குப்தர், அதிர்ஷ்ட எண்: 1,4,9,7
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,J




**கும்பம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். பணியில் பாராட்டுக்கள் கிடைக்கும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். அந்நிய தேசப்பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். பொறுப்பும், சிறப்பும் சேர்க்கும். காரிய வெற்றிக் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். கோரிக்கைகள் நிறைவேறும். நன்மைகள் நாடி வரும். வராத கடன் வந்து சேரும். பணவரவு உண்டு. பெண் வழிப் பிரச்சனை முடிவிற்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. கற்பனை வளம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்தியை ஏற்படுத்தும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். வீடு நிலமும், விசேஷ யோகமும் அமையும் காலம். நண்பர்களின் உதவி கிடைக்கும். நல்லோர்களின் நட்பு கிட்டும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 8,1,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,C




**மீனம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். பை நிறைய லாபமும், பணம் காசும் சேர்க்கையும் ஏற்படும் காலம். மாணவர் திறமை பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பணத்தட்டுப்பாடு ஏற்படும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வகை ஆதாயம் கிட்டும். திருமண முயற்சி பலன் தரும். கால்நடைகளால் லாபம் கிடைக்கும். எதிரிகள் கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். தொல்லைகள் அகலும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கேட்ட உதவிகள் கிட்டும். தொழில் முயற்சி பலன் தரும். நீண்ட நாளைய நோய்கள் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். தேகப்பலம் கூடும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். மறைமுக எதிர்ப்புக்கள் மறையும். சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். கூட்டுப் பிரார்த்தனையால் மாற்றம் கிடைக்கும். ஆரோக்கிய பொலிவும், அடிமனதில் தெளிவும் ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்கு முடிவுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேரர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,Y

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான திரு. எடப்பாடி மு. பழனிசாமியை அவரது இல்லத்தில் சந்தித்த கனடா ஒன்றாரியோ மாகாண சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் சமூக சேவைகள் பாராளுமன்றச் செயலாளர் லோகன் கணபதி அவர்கள்





அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சருமான திரு. எடப்பாடி மு. பழனிசாமி அவர்களை, சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில் (18.1.2024 வியாழக்கிழமை), கனடா நாட்டில் உள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் சமூக சேவைகள் துணை அமைச்சின் பாராளுமன்றச் செயலாளரும் மாகாண அரசின் உறுப்பினருமான லோகன் கணபதி அவர்கள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.

அப்போது, ஒன்றாரியோ மாகாணத்தின் கௌரவ இலச்சினையை கழகப் பொதுச் செயலாளருக்கு அணிவித்தார். இச்சந்திப்பின் போது, இலங்கை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஆ.மு. சிவாஜிலிங்கம், பத்திரிகையாளர் சண் மாஸ்டர் ஆகியோரும் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## Ontario's MPP and the Parliamentary Assistant to Ministry Logan Kanapathi hosted 'Tamil Heritage Month' Celebrations in City of Markham

## மார்க்கம் – தோர்ன்ஹில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றச் செயலாளருமாக லோகன் கணபதி நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டம்



கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் மார்க்கம் - தோர்ன்ஹில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாணத்தின் சிறுவர்கள், குழந்தைகள் நலன்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமாக லோகன் கணபதி அவர்கள் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டம் கடந்த 14-01-2024 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் மார்க்க்ம் நகரசபையின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.



விழாவிற்கு மார்க்கம் நகரத்தின் மேயர் பிராங்க் ஸ்கெப்பட்டி மற்றும் உறுப்பினர்கள் மற்றும் மாகாண அரசின் உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

கலை நிகழ்ச்சிகளும் மற்றும் சிறப்பான உரைகளும் இடம்பெற்றன. இந்த விழாவில் "மலையகம் 200" என்ற கருப்பொருளிற்கு முக்கியத்துவம் வழங்கப்பெற்று இருவர் சிறப்புரையாற்றினார்கள். மேற்படி உரைகளில் மலையக மக்கள் கடந்த 200 ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைக்கப்பட்ட நாட்களிலிருந்து அவர்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் மற்றும் அவர்களது தேவைகள் இன்னும் கவனிக்கப்படாமல் இருப்பது போன்ற விடயங்கள் தொடர்பான விடயங்கள் அடங்கியிருந்தன.





அன்றை விழாவில் கலை நிகழ்ச்சிகளை வழங்கிய அனைத்துக் கலைஞர்களும் கௌரவிக்கப்பெற்றனர்.

விழாவை நடத்துவதற்கு லோகன் கணபதி அவர்களின் அலுவலகத்தின் முக்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் உதவியாளர்கள் தொண்டர்கள் பக்க பலமாக இருந்தார்கள் என்பதும் திருமதி. (டாக்டர்) லோகன் கணபதி அவர்களும் அங்கு வருகை தந்து விழா சிறப்புற நடைபெற ஆலோசனைகளை வழங்கி நின்றார்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL / COMMERCIAL / INDUSTRIAL / VACANT LAND / CONSTRUCTION

## OUR SERVICES

- 1st & 2nd Mortgages
- Purchase
- Refinance
- Renewal
- Switches
- Equity Line of Credit
- Pre-approvals
- Self-employed
- Multi-rental properties
- New immigrants



அன்பும் ஆனந்தமும் பொங்கிட....!
அறமும் வளமும் தழைத்திட...!
இல்லமும் உள்ளமும் பொங்க...!

இனிய தமிழர் திருநாளாம்...! பொங்கல் நல்வாழ்த்துக்கள்

**Reach us through**

1585 Markham Rd,
Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

NESAN
Subramaniam

416-908-5656



WE DEAL WITH ALL BANKS

Powered By

Mortgage Alliance — RightBroker = RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465
Scotiabank
TD Canada Trust
National Bank
First National Financial LP
MCAP
Home Trust
Equitable Bank
RFA
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளுர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

Need Money? பணப்பிரச்சனையா?
கவலை வேண்டாம்! கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
·Loans
·Cash
·Debt Consolidation
·1st & 2nd Mortgage
·Home Renovation Loan
·Equity Loans
No Credit Check
Next Day Approval
Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்
Call Now:
647-812-6350

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1450 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 19, 2024

# தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார்? வேட்பாளர் யோகேஸ்வரன் வெளிப்படையாகவே சிறீதரனுக்கு ஆதரவு தெரிவிப்பு

— நடராசா லோகதயாளன்



ஈழத்தில் தமிழ் மக்களின் கடந்தகாலம் மற்றும் எதிர்காலம் ஆகியவற்றுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை மறுக்க முடியாது. இந்நிலையில் வடக்கு கிழக்கில் தமிழர் தாயகப் பகுதிகளில் அந்த கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது ஒரு பெரும் பேசுபொருளாகியுள்ளது.
எதிர்வரும் ஞாயிறு அதாவது இம்மாதம் 21ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவருக்கான தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இது என்னவோ அடுத்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு ஒப்பாகப் பேசப்படுவதை காண முடிகிறது. அந்தளவிற்கு இது குறித்த பேச்சுக்கள் உள்ளன. தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என அந்த கட்சியினையும் அதன் தொண்டர்களையும் விடவும் எதிர்த் தரப்பினரே அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டுகின்றனர். (உள்ளே செய்தி ம் பக்கத்தில்)

## MPP and the Parliamentary Assistant to Ministry Logan Kanapathi hosted 'Tamil Heritage Month' Celebrations in City of Markham



# மார்க்கம் – தோர்ன்ஹில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றச் செயலாளருமாக லோகன் கணபதி நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டம்

கனடா ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாணத்தின் சிறுவர்கள், குழந்தைகள் நலன்கள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமாக லோகன் கணபதி அவர்கள் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதம்" கொண்டாட்டம் கடந்த 14-01-2024 ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல் மார்க்கம் நகரசபையின் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு மார்க்கம் நகரத்தின் மேயர் பிராங்க் ஸ்கெப்பட்டி மற்றும் உறுப்பினர்கள் மற்றும் மாகாண அரசின் உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.
(உள்ளே செய்தி 22ம் பக்கத்தில்)

# தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி மு. பழனிசாமியை சந்தித்த எமது ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி

நேற்று 18.1.2024 வியாழக் கிழமை, கனடா நாட்டின் ஒன்றாரியோ மாகாணத்தின் சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் பாராளுமன்றச் செயலாளரும் மாகாணஅரசின் உறுப்பினருமான லோகன் கணபதி அவர்கள் தமிழ்நாடு சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களை மரி-யாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்.
(உள்ளே செய்தி 22ம் பக்கத்தில்)



## Ontario's Minister and MPP Hon Raymond Cho hosted '2024 New Year's Levee'

# ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான Hon Raymond Cho அவர்கள் நடத்திய "புத்தாண்டை வரவேற்கும்" நிகழ்வு



ஒன்றாரியோவில் அனைத்து மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றவராகவும் நன்கு அறியப்பெற்றவராகவும் விளங்கும் ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான **Hon Raymond Cho** அவர்கள் நடத்திய "புத்தாண்டை வரவேற்கும்" நிகழ்வு 18-01-2024 வியாழக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ நகரில் சிறப்பாக நடைபெற்றது.
(உள்ளே செய்தி 21ம் பக்கத்தில்)

# ஒன்றியோ மாகாண அரசின் பாராளுமன்றமான "குயின்ஸ்பார்க்"கில் எம்பிபியும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் நடத்திய "தமிழ் மரபுத் திங்கள்" விழா



இந்த விழாவில் அழைக்கப்பெற்ற நூற்றுக்கணக்கான விருந்தினர்களுடன் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். எம்பியும் துணை அமைச்சருமான விஜேய் தணிகாசலம் அவர்களின் அழைப்பின்பேரில் மாகாண அமைச்சர் ரேமண்ட் சோ. எம்பிபி அரிஸ் பாபிகியன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (உள்ளே செய்தி 15ம் பக்கத்தில்)



# கனடாவில் மறைந்த 'கெப்டன் விஜயகாந்த்' அவர்களின் மறைவிற்கு மரியாதை செலுத்தும் முகமாக நடத்தப்பெற்ற அஞ்சலி நிகழ்வு

கனடாவில் மறைந்த கெப்டன் விஜயகாந்த் அவர்களின் மறைவிற்கு மரியாதை செலுத்தும் முகமாக கடந்த 13-01-2024 அன்று சனிக்கிழமை நடத்தப்பெற்ற அஞ்சலி நிகழ்வு மக்கள் மனங்களில் நிறைவைத் தந்துள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் 'கனடா உதயன்' ஆசிரிய பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ள 'நன்றி தெரிவிக்கும்' குறிப்பில் தெரிவித்துள்ளார்கள். கனடா-ஸ்காபுறோ நகரில் ஆரோசை இசைக்குழு மற்றும் ஆரபி புரடக்'ன் இணை ஏற்பாட்டில் நடைபெற்ற கப்டன் விஜயகாந்த் அவர்களு-க்கான மரியா-தை செலு-த்தும் அஞ்சலி நிகழ்வு இனிதான பாடல்களோடும் மனதை நெகிழ வைக்கும் உரைகளோடும் அனைத்தும் அடங்கிய அடக்கமான விழாவாக நிறைவுற்றது. இந்த நிகழ்வு கனடா பைரவி நுண்கலைக் கூடத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (உள்ளே செய்தி 21ம் பக்கத்தில்)